Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + II + II

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 01 திங்கட்கிழமை (15.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 179

## கொரோனா தொற்றானால் வாக்கெடுப்பு இரத்தாகும்

### தேர்தல்கள் ஆணைக்குழு



(கொழும்பு) பொதுத் தேர்தல் வாக்கெடுப் பின்போது ஏதாவது ஒரு பிரதேசத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவும் நிலை ஏற்பட்டால், குறித்த பகுதியில் வாக்கெடுப்பு இரத்துச் செய்யப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 15

## யாழில் தேர்தல் ஒத்திகை



04

## கடலட்டை பிடிப்பதற்கு எதிராக வடமராட்சியில் இன்று கவனயீர்ப்பு

(கரணவாய்) கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரால் வடமராட்சி கிழக்கில் கட லட்டை பிடிப்பதற்கு அனுமதி வழங்கப் பட்டதைக் கண்டித்து இன்று காலை 10.30 மணிக்கு வடம 15

## நெல்லியடியில் ஹெரோயினுடன் இருவர் கைது

(கரணவாய்) நெல்லியடி நகரப்பகுதியில் காங்கேசன்துறை மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவி னர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கை 15

க.பொ.த (சா/த)

**வரலாறு**

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் ஆனி மாத இராசி பலன்கள் உள்ளே

## சமஷ்டி இல்லாமல் அரசியலமைப்பில் திருத்தம்

# தமிழ் மக்களுக்கு இதன் ஊடாகத் தீர்வு

### ஆளும் கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன




(கொழும்பு) சமஷ்டி உள்ளடங்காதவாறு அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட்டு அதன் ஊடாக தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்படும் என ஆளும் கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபே வர்த்தன தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

| கொரோனா வைரஸ் | பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | குணமடைவு | பலி |
|---|---|---|---|---|
| | 1889 | 05 | 1287 | 11 |

## வடக்கை இலக்கு வைத்துள்ள ஜனாதிபதி செயலணி?

(கொழும்பு) கிழக்கின் தொல்பொருள் பிரதேசங்களை கண்காணிப் பதைப் போன்றே வடக்கிலும் தொல்பொருள் பிரதேசங்களை கண்காணிக்கும் பொறுப்பை ஜனாதிபதி செயலணிக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்னவின் தலைமையில் இந்த வாரம் கூடும் செயலணிக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்படவுள்ளதாக 15

## வவுனியா ஓமந்தையில் வெடிபொருட்கள் மீட்பு



(வவுனியா) வவுனியா ஓமந்தை நாவற் குளம் பகுதியில் வீட்டுக் கிணற் றில் இருந்து வெடிபொருட்களை நேற்று பொலிஸார் மீட்டுள்ளனர். குறித்த பகுதியில் அமைந்துள்ள கிணறு 15

## பெண் உட்பட ஐவர் மீது வீடு புகுந்து வாள்வெட்டு

### வவுனியா மகாறம்பைக்குளத்தில் சம்பவம்

(வவுனியா) வவுனியா மகாறம்பைக்குளம பகுதியில் வீடு புகுந்து பெண் உட்பட ஐவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. நேற்று இரவு 7.30 மணியள வில் மகாறம்பைக்குளம் பகுதியில் உள்ள வீடொன 15

## வடமராட்சியில் வாள்வெட்டு!

### மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்) யாழ் வடமராட்சி பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு தாக்கு தலில் மூவர் படுகாய மடைந்துள்ளதாக தெரி 15

## விடத்தல்பளை முகாமில் ஒருவருக்கு கொரோனா

### போதனா பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத் தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 20 பேருக்கு கொரோனாத் தொற் றுப் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக வும், அவர்களில் விடத் 15

# தேர்தலுக்குப்பின் ஐ.தே.க தலைமையை ஏற்பேன்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் ஐந்தாம் திகதிக்கு பின்னர் சிறிகொத்தவில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை தாம் ஏற்றுக்கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சிப் பதவியில் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கூறுகின்ற நிலையில், அதற்கு சந்தர்ப்பத்தை வழங்கி அமைதியான முறையில் வேறு கூட்டமைப்பொன்றை உருவாக்கியுள்ளோம்.

எனினும், எதிர்வரும் ஓகஸ்ட் ஐந்தாம் திகதிக்குப் பின்னர் சிறிகொத்தவில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக உறுதியளிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தாம் அமைதியாக இருந்தாலும் இன்னும் பலமாகவே உள்ளதாகவும், தாம் எழுந்தால் யாராலும் வீழ்த்த முடியாது என ஐக்கிய தேசிய கட்சியைப் பிரதிநிதிததுவப்படுத்தும் முன்னாள் பாராளுமனற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,8)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு : Tel - 077 340 5951
E-mail : engchelvam@gmail.com

(3006)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் நடனபாட ஆசான்

திரு. **ந.குமரவேள்** அவர்களின் பாசமிகு மாமியார்

அமரர் **பரமேஸ்வரி பொன்னம்பலநாதன்**

அவர்கள் இறையடி சேர்ந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(C-9704) ஆசிரியர் கழகம் - யா.யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 25 - 05 - 1949

மறைவு 14 - 06 - 2020

சிவத்திரு **நடராஜா பாலஸ்கந்தன்**

(ஓய்வு பெற்ற பதிவாளர், யாழ். மாவட்டச் செயலகம்)

எமது அன்பு நண்பன் **கார்த்திக்** அவர்களின் ஆருயிர்த் தந்தை நடராஜா பாலஸ்கந்தன் அவர்கள் நேற்று (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை காலை சிவபதம் அடைந்து விட்டார்.



மீளாத் துயில் கொண்டு எமை
ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டீர் ஐயா!
கலையாத நினைவுகளோடு
கண்ணீர் உதிர உதிர
பூக்களால் அர்ச்சித்து உம்
ஆத்மா சாந்தியடைய எம்
கண்ணீர்த் துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் இழப்பினால் வாடித்துடிக்கும் நண்பனின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
2002 உயர்தர நண்பர்கள்.

(3023)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திதி 15.06.2020

மலர்வு 12.07.1946

உதிர்வு 27.06.2019

அமரர் **வசந்தாதேவி கனகசிங்கம்**

அன்புத் திருமகளாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
அறிவின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
எம்மை வழி நடாத்திய அன்னையே!
நீர் எம்மைவிட்டுப் பிரிந்து
ஓராண்டு கடந்திருப்பினும்
அகன்றிடுமோ எங்கள் துயர்
வாழும் காலம் வரை தொடர்ந்திடுமோ
உங்கள் நினைவு என்றும்
எங்கள் இதயத்தில் குடியிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்

"வசந்தகம்"
கரகத்தாம்புலம்,
கொற்றாவத்தை.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(3005)

# இலங்கையில் இராணுவமயமாக்கல் தொடருமாயின் இராணுவத் தலைமையின் அழுத்தம் அதிகரிக்கும்

## ஓய்வுநிலை புலனாய்வு நிபுணர் ஹரிகரன் எதிர்வு கூறல்

(கொழும்பு)

**இலங்கையில் சிவில் நிர்வாகம் உட்பட பல்வேறு கட்டமைப்புக்களிலும் இராணுவ மயமாக்கல் தொடருமாயின் பொதுத்தேர்தல் நெருங்கும்போது இராணுவத் தலைமையின் அழுத்தம் அதிகரிக்கும் அபாயமுள்ளதாக இந்திய இராணுவத்தின் ஓய்வுநிலை புலனாய்வு நிபுணரும் தெற்காசியாவில் பயங்கரவாதம் மற்றும் கிளர்ச்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் நீண்ட அனுபவம் வாய்ந்தவர்களுள் ஒருவரும் இராஜதந்திர மூலோபாயங்கள் எழுத்தாளருமான கேணல் ஆர்.ஹரிகரன் தெரிவித்தார்.**



தற்போதைய பூகோளச் சூழலில் இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் நல்லிணக்க அரசியல் காணப்படுவதால் இலங்கை விடயங்களில் இந்தியா தலையிடுவதற்கு வாய்ப்புக்கள் குறைவாக உள்ளதோடு இந்தியாவும் சீனாவும் இந்த விடயங்களை கூர்ந்து அவதானிக்கும் என்றும் இலங்கையின் போர்க்குற்றங்கள் மனித உரிமை விடயங்களை கையாளும் அமெரிக்காவும் அடக்கியே வாசிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமகாலத்தில் இலங்கையில் படை அதிகாரிகள் நிர்வாக மற்றும் இதர அரச கட்டமைப்புக்கள் இணைக்கப்படுகின்றமை, ஜனாதிபதி செயலணிகளுக்குள் உள்வாங்கப்படுகின்றமை தொடர்பில் நேற்று ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்ததன் பின்னர் தொடர்ச்சியாக முப்படை அதிகாரிகளை நிர்வாகத்திலும் பல்வேறு உயர்பதவிகளில் அமர்த்தி வருகிறார். பல்வேறு நிர்வாகப் பிரிவுகளும் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றன. இதன் உள்நாட்டு மற்றும் சர்வதேச விளைவுகள் பற்றிய புரிதல் அவசியமாகின்றது.

இராணுவமயமாக்கலுக்கான காரணம் இராணுவச் சேவை புரிபவர்கள் பொதுவாக சிவில் நிர்வாகத்தினர் சேவையில் கடமை, கண்ணியம் மற்றும் கட்டுப்பாடு மூன்றுமே கிடையாதென நம்புபவர்களாக இருக்கின்றார்கள்.

முன்னாள் இராணுவ அதிகாரியான கோட்டாபயவும் இந்த நிலைப்பாட்டில் இருப்பவராக கொள்ளமுடியும். இதன் காரணமாகவே, கொரோனா தாக்கத்தை கட்டுப்படுத்துதல், சுகாதார அமைச்சின் செயலாளர் உட்பட அத்துறைகளில் இராணுவத்தினரை உள்ளீர்த்திருக்கலாம். அதேபோன்று சிவில் நிர்வாகத்தில் அதிகளவு பணம் புழங்கும் மகாவலி அபிவிருத்தித்துறை போன்றவற்றுக்கும் இராணுவ அதிகாரியை செயலாளராக நியமித்திருக்கலாம்.

ஆனால் ஏனைய சிவில் நிர்வாகத்தில் படை அதிகாரிகளை உட்புகுத்துவது பற்றி அதிகளவில் கரிசனை கொள்ள வேண்டியுள்ளது. நெருங்கி வரும் அபாயம் குறிப்பாக இராணுவம் சிவில் நிர்வாகத்தில் ஈடுபடுத்தப்படுவதால் குறுகிய காலத்தில் நிர்வாக செயன்முறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டாலும் மக்களின் ஜனநாயக அடிப்படை உரிமைகளை காலவோட்டத்தில் அது பாதிப்படையச் செய்யும்.

இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இவ்வாறு இராணுவத்தின் கைகள் நிர்வாகத்தில் ஓங்கினால் தேர்தல் நெருங்கும் போது இராணுவத் தலைமையின் அழுத்தம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. பாகிஸ்தான், பர்மா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இராணுவத்தின் மறைமுகப் பிரவேசமே ஜனநாயக கலாசாரத்தை கொச்சைப்படுத்தியுள்ளன என்பதற்கு உதாரணமாகின்றன. ஏற்கனவே ஜனாதிபதி கோட்டாபய, சிங்கள பௌத்த பேரினவாதத்தை ஊக்குவிக்கிறார் என்ற மனநிலை தமிழ்-முஸ்லிம் மக்களிடையே நிலவுகிறது. இந்த நிலையில் இராணுவ மயமாக்கலை வெவ்வேறு வடிவத்தில் அவர் தொடர்ந்தால் ஜனநாயகத்துக்கு எதிர்மறை நிலையே தோற்றம்பெறும். அதுமட்டுமன்றி ஒடுக்கப்பட்டுள்ள இனவாதம் மீண்டும் உயிர்த்தெழும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சூழ்நிலையில் கோட்டாபய தலைமையிலான ஆட்சியில் பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தல் பாரபட்சமின்றி நடத்த முடியும் என்பதை வெளிப்படுத்தினால்தான் பொதுமக்கள் மனதில் கோட்டாபயவின் இராணுவமயமாக்கலைப் பற்றிய சந்தேகங்கள் மறையும். அல்லாதுவிட்டால் அவை பாரதூரமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# கொரோனா தாக்கம் அதிகரித்தாலும் தேர்தல் நிச்சயம் நடைபெறும்

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் திட்டவட்டம்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸின் பரவல் ஏற்பட்டாலும் பொதுத்தேர்தல் நிச்சயம் நடைபெறும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க திட்டவட்டமாகத் தெரிவித்தார். கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் காணப்படும் பகுதிகளில் விசேட வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதன் மூலம் வாக்களிப்பு இடம்பெறும் என்றும் இது குறித்து சுகாதார அதிகாரிகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தலை மீண்டும் ஒத்திவைப்பதற்கு பதில் அதனை நடத்துவதற்கான அவசர சூழ்நிலை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ள அவர், கொரோனா வைரஸ் குறிப்பிட்ட ஒரு பகுதியில் பரவினால் முடக்கப்பட்டுள்ள பகுதிக்குள் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கும் அல்லது அந்தப் பகுதிக்கு வெளியே அமைப்பதற்கும் திட்டங்கள் உள்ளன எனவும் தெரிவித்தார்.

மேலும் குறிப்பிட்ட பகுதிக்கு வெளியே வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டால் போக்குவரத்து வழங்கப்படும் எனவும் நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் கீழ் வாக்களிப்பு நிலையங்களை மாற்றுவதற்கு தேரதல்கள் ஆணைக்குழுவிற்கு அதிகாரமுள்ளது எனவும் தெரிவித்தார். இதே வேளை தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வாக்களிப்பை உறுதி செய்வதற்காக தனிமைப்படுத்தல் நிலையங்களில் வாக்களிப்பு நிலையங்களை உருவாக்குவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர்நாயகம் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# குணமடைந்தோர் 1287

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் மேலும் 35 பேர் நேற்றைய தினம் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை 1,884 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அதில் 1,287 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில், 586 பேர் தற்போதும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ள நிலையில், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 35 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில், இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தனது மக்களுக்காக குரலெழுப்பிய ஓர் உண்மையான தொழிற்சங்கவாதி

## சுனில் ஜயவர்த்தனவுக்கு இரங்கல் தெரிவித்த கரு

(கொழும்பு)

தனது மக்களுக்காகக் குரலெழுப்பிய ஓர் உண்மையான தொழிற்சங்கவாதி படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் கடும் கண்டனத்திற்குரியது என்றும். நாட்டில் இடம்பெறும் இத்தகைய ஈவிரக்கமற்ற செயற்பாடுகளுக்கு எதிராக மக்களனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் முன்னால் சபாநாயகர் கரு ஜயசூரிய அறைகூவல் விடுத்துள்ளார்.

வாகன குத்தகை வழங்கல் மாபியா தொடர்பில் வெளிப்படுத்திய தேசிய ஆட்டோ சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்த்தன கடந்த செவ்வாய்க்கிழமை வாகனங்களைக் குத்தகைக்கு வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றின் முன்னால் கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவத்திற்குக் கண்டனம் வெளியிட்டு தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் கரு ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளதாவது.

சுனில் ஜயவர்த்தன கொலை செய்யப்பட்ட சம்பவம் மிகுந்த கண்டனத்திற்குரியதாகும். அவர் தன்னுடைய மக்களின் பக்கம் தொடர்ந்தும் நின்ற உண்மையான ஓர் தொழிற்சங்கவாதி ஆவார்.

அவர் உதவி தேவைப்பட்ட மற்றுமொரு ஆட்டோ சாரதிக்காக உதவ முற்பட்டதுடன், அரசாங்கம் வழங்குமாறு உத்தரவிட்டுள்ள உரிய தள்ளுபடிகளை அல்லது சலுகைகளைவழங்குமாறே கோரினார்.

இவருடைய படுகொலை போன்ற மிகமோசமான ஈவிரக்கமற்ற சம்பவங்களுக்கு எதிராக மக்கள் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# நாவாந்துறையில் தேர்தல் ஒத்திகை





(யாழ்ப்பாணம்)

**பொதுத் தேர்தலுக்கான தேர்தல் ஒத்திகை யாழ்ப்பாணம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.**



வாக்காளர்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்து வருகை தந்திருந்ததோடு சமூக இடைவெளியும் முறையாகப் பின்பற்றப்பட்டதுடன் வாக்காளர்கள் உள் நுழைய முன்னர் அவர்களது உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்பட்டது.

வாக்காளர் ஒருவர் தமது வாக்கினை அளிப்பதற்கு எடுக்கும் நேரத்தை கணிப்பதில் உரிய அதிகாரிகள் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# ஐக்கிய தேசியக்கட்சி மதம் போன்றது பாதுகாக்க ஆதரவாளர்கள் வாக்களிப்பர்

## அகிலவிராஜ் நம்பிக்கை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி ஒரு மதத்தைப் போன்றது. எனவே அதனைப் பாதுகாப்பதற்காக ஆதரவாளர்கள் நிச்சயம் வாக்களிப்பார்களென அக்கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியில் திறமையானவர்கள் இருக்கின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி, எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றியை தனதாக்குவதற்கு, கட்சியில் இருந்து பிரிந்து சென்ற முக்கியமானவர்களுக்கு அழைப்பு விடுத்து வருகின்றது.

அந்தவகையில் கட்சியில் வந்து மீண்டும் இணைந்து கொள்ளுமாறு மாத்தறை மாவட்டத்திற்கான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வேட்பாளர் மங்கள சமரவீரவுக்கும் ஐக்கிய தேசியக்கட்சி அழைப்பு விடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மாணவர்களுக்கு உலருணவுப்பொதிகள்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் 12 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு போசாக்கு உணவு நிறைந்த உலர் உணவுப் பொதிகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. கடந்த நாட்களில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாத காரணத்தினாலேயே இவ்வாறான உலர் உணவுப் பொதிகள்வழங்கப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலை கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பித்ததும் மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கப்படும்.எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வலயக்கல்வி பணிமனைகள் ஊடாக மாணவர்களின் வீடுகளுக்கே குறித்த உலர் உணவுப் பொதிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. இதேவேளை, அனைத்துப் பாடசாலைகளுக்கும் 15 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான அனைத்து சுகாதார ஆலோசனைகளையும் அதிபர்களுக்கு வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# தேசிய தொழில் தகைமை பாடநெறிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

உயர்தரத்தின் தேசிய தொழில் தகைமை பாடநெறியின் கீழ் தரம் 12 இற்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கல்வி அமைச்சு மேலும் தெரிவிக்கையில், நாடளாவிய ரீதியில் அனைத்து வலயக்கல்விப் பணிமனைகளை உள்ளடக்கும் வகையில் 423 பாடசாலைகளில் மாணவர்கள் உள்ளீர்க்கப்படவுள்ளனர்.

சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களும் இதன்மூலம் நன்மையடைய முடியும்.

தகுந்த பாடசாலையைத் தெரிவுசெய்வதற்கான சந்தர்ப்பமும் மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடநெறியின் கீழ் உடற்கல்வி மற்றும் விளையாட்டு, கைவினைக் கலை, உள்ளக வடிவமைப்பு, அரங்கற் கலை, குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி மற்றும் கிராபிக் வடிவமைப்பு உள்ளிட்ட 26 பாடநெறிகள் அடங்குகின்றன.

இதுகுறித்த மேலதிக தகவல்களை 011 278 7136 அல்லது 011 278 6746 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து பெற்றுக் கொள்ள முடியும் என்றும் இதனைத் தவிர www.moe.gov.lk எனும் கல்வி அமைச்சின் இணையத்தள முகவரிக்கு பிரவேசித்தும் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (ஜ-8)

# தேசியம் என்ற போர்வைக்குள் இருந்து அரசியல் செய்யாமல் எம் தலைவரைப் பலப்படுத்துவோம்

## ஈ.பி.டி.பி. வேட்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன்

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கான உரிமைப் போராட்டம் மற்றும் அதனுடன் கூடிய ஏது நிலைகளால் அதிகம் ஈர்க்கப்பட்ட பிரதேசமாக வடமராட்சி பிரதேசம் காணப்படுகின்றது. ஆனாலும் அந்த தாக்கங்களிலிருந்து இன்று எமது மக்கள் விடுபட்டு தமது எதிர்காலம் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு முயற்சிக்கின்றனர் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார். வடமராட்சி தம்பசிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும், மக்களின் இந்த முயற்சிக்கு தேசியம் என்ற போர்வைக்குள் இருந்து அரசியல் செய்பவர்களால் ஒரு போதும் தீர்வுகளை கண்டு தரமுடியாது. மக்களின் எதிர்காலம் நோக்கிய பயணத்துக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரது வழிமுறையே சாத்தியமானது என இன்று தமிழ் அரசியல் தரப்பினரும் ஏற்றுள்ளனர்.

அந்தவகையில் எமது வடமராட்சி மக்களிடையே மனமாற்றம் ஒன்றே அவசியமாகின்றது. அந்த மாற்றமே அவர்களது எதிர்காலத்தை வென்றெடுக்கும் சக்தி கொண்டதாக அமையும். அதற்காக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களுக்கு பலம் கொடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமானத்துக்குரிய வலம்புரியில்

**எதிர்வரும் 17.06.2020 புதன்கிழமை**

முதல்



பேராசிரியர் **முருகர் குணசிங்கம்**

எழுதும்

**“புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு”**

வெளிவரும்

**வாசிக்கத் தவறாதீர்கள்!**

# சரணாலயங்கள், பூங்காக்கள் இன்று முதல் திறக்கப்படும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து சரணாலயங்கள், உயிரியல் பூங்காக்கள் மற்றும் தாவரவியல் பூங்காக்கள் இன்று முதல் திறக்கப்படவுள்ளன.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது சுற்றாடல் மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேகரன் இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

இதன்படி உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக இன்று தேசிய சரணாலயங்களை திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவது கட்டாயம் எனவும் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேகரன் தெரிவித்தார். (ஜ-8)


# 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

## அமரர். அம்பலவாணன் ஸ்ரீகரன்

(ஓய்வுபெற்ற ஆயுர்வேத வைத்தியர் “சுதுமலை வைத்தியம்”
முன்னாள் ஆசிரியர் , மானிப்பாய் இந்துக் கல்லூரி)



மண்ணுலகில்
19 . 07 . 1949

விண்ணுலகில்
16 . 05 . 2020

எங்கள் குடும்பத்தலைவரின்
மரணச்செய்தியைக்
கேட்டும் ஓடோடிவந்து ஆறுதல் கூறி
பலவழிகளில் உதவி புரிந்தோருக்கும்
பிறநாடுகளில் இருந்து தொலைபேசிகள்
மூலமும் முகநூல் மூலமும் தொடர்புகொண்டு
ஆறுதல் கூறிய, மரணச் சடங்கினை முறையாக
செய்திட பலவழிகளில் உதவிய உறவினர்கள்,
பாசமிகு நண்பர்கள், மலரஞ்சலி,
பதாகை அஞ்சலி, துண்டுப்பிரசுர அஞ்சலி
செலுத்திய அனைவருக்கும் எமது
நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

“சுதுமலை வைத்தியம்”
தோப்பு சுதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை

(C-9702)

குடும்பத்தினர்
076 187 9228

## இராசிபலன்

15.06.2020
ஆனி 01, திங்கட்கிழமை
தசமி முழுவதும்
ரேவதி பின்னிரவு 4.46 மணிவரை
சுபநேரம் 11.53-1.23 மணிவரை
இராகுகாலம் 7.23-8.53 மணிவரை
சந்திராஷ்டமம்- உத்தரம்

வளவன்


மேஷம்

தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


ரிஷபம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்பு உண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மிதுனம்

அரச வழியில் அனுகூலம் உண்டு, நீண்ட நாளைய விரும்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொட்டகாரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கடகம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலம் சீராகும், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


சிம்மம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் சிறு இடையூறுகள் ஏற்டலாம், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.


கன்னி

தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பெண்களின் சுப காரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் தரும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு.


துலாம்

பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், தெய்விக சிந்தனை மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம் அமைப்பீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.


தனுசு

பெற்றோர்கள் மீது பிரியம் கூடும் நாள், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் மனம் மாறுவர், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.


மகரம்

விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பிரபல்யமான சந்திப்பால் பெருமையடைவீர்கள், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கிடைக்கலாம்.


கும்பம்

குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வாய்ப்புக்கள் தேடி வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


மீனம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், திடீர் பயணத்தால் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**உண்மையான காதல் பாதை கரடுமுரடானது.**

# விவசாய வியாபார தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டல்

(யாழ்ப்பாணம்)

விவசாய நவீன மயப்படுத்தல் திட்டத்தின் கீழ் வட மாகாணத்திலுள்ள விவசாய வியாபார தொழில் முயற்சியாளர்களின் தொழில் முயற்சிகளை வலுப்படுத்தும் முகமாக பெருந்தோட்டக் கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி அமைச்சின் மூலம் அவர்களது தொழில் முயற்சிகளை மேம்படுத்தும் முகமாக சிறிய நடுத்தர மற்றும் பாரிய விவசாயத்துறைகளை இனங்கண்டு தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சிறிய தொழில் முயற்சிகளுக்கு முதலீட்டின் ஐம்பது வீதத்தினை பாரிய தொழில் முயற்சியாளர்களுக்கு 100 மில்லியன் ரூபாய் வரையான நிதியினை அரசிமிருந்து தொழில் முயற்சிக்குரிய மானியமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ் உதவித் திட்டம் வழங்கக் கூடிய தொழில் முயற்சிகள்.

வாசனைத் திரவிய உயர் பெறுமதி சேர்ப்புகள்,விவசாயக் கழிவுகளுக்கான தீர்வுகள், பழங்கள்மற்றும் மரக்கறிகளை பதனிடல், விவசாய சக்தி தீர்வுகள், விவசாய உற்பத்தி அறுவடைக்கு பின்னரான தொழில் நுட்பம், உணவு மற்றும் மதுசாரம் அல்லாத குடிபானங்கள்,தேங்காய் மற்றும் தும்பு பதனிடல் மேம்படுத்தல்கள், பூச் செய்கை பெறுமதி சேர்ப்புகள்,கால்நடை மற்றும் பண்ணை உற்பத்திகளுக்கான உயர் பெறுமதி சேர்ப்புகள், தேயிலை உயர்பெறுமதி சேர்ப்புகள்,காலநிலை நட்பு விவசாயம் மற்றும் புதிய விவசாயத் தொழில் நுட்பம்,வாசனைப் பொருள் மற்றும் மருந்து மூலிகை உயர் பெறுமதி சேர்ப்புகள்,விவசாயப் பொருட்களுக்கான உள்ளக மற்றும் வெளியக வசதி வாய்ப்புக்கள் மற்றும் பொதியிடல் தீர்வுகள் என்பன வாகும்.

இவ்விடயம்தொடர்பானசெயலமர்வு கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்படவுள்ளதால் ஆர்வமுள்ள தொழில் முயற்சியாளர்கள் தங்களது தொழில் முயற்சி தொடர்பான விபரங்களை வடக்கு மாகாண விவசாய அமைச்சில் விண்ணப்பப்படிவங்களை நேரடியாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ (minagrinp@gmail.com) இன்று முதல்பெற்று எதிர்வரும் 22.06. 2020 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு அமைச்சின் உதவித்திட்டமிடல் பணிப்பாளரின் 0212217357 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (2-5)



**யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனின் 401 ஆவது சிராத்த தினம் சங்கிலி மன்னன் நினைவு நாள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது.**

## இணையத்தளம் அறிமுகம்

தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்த சங்கரியின் 87வது பிறந்த தினத்தை முன்னிட்டு கட்சியின் உத்தியோகபூர்வ இணையத்தள வெளியீடு இன்று 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் இடம் பெறும்.(2-4-5)

## "பிரபஞ்சத்தின் மணி" நூல் வெளியீடு இன்று

(குப்பிழான்)

எழுத்தாளர் திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய உலகின் முதலாவது ஆன்மீக, சமூக, விஞ்ஞான ஆய்வு நூலான "பிரபஞ்சத்தின் மணி" நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல்10.30 மணியளவில் காரைநகர் மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணியர் ஆலய மண்டபத்தில் இடம் பெறும்.

காரைநகர் காட்டுப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாசாலை அதிபர் ந.சிவானந்தராசா தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வு சுகாதார முறையும் உரிய சமூக இடைவெளி பேணப்பட்டும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 135 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 160 | 200 |
| தக்காளி | 160 | 200 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 120 | 80 |
| கோவா | 150 | 120 | 130 | 160 |
| கரட் | 120 | 200 | 180 | 240 |
| பூசணி | 50 | 40 | 40 | 50 |
| புடோல் | 80 | 60 | 60 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 220 | 300 | 320 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 180 | 150 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 140 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 60 | 60 |
| லீக்ஸ் | 150 | 170 | 180 | 200 |
| பீற்றூட் | 120 | 100 | 120 | 160 |
| கறிமிளகாய் | 80 | 80 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 160 | 400 |
| போஞ்சி | 250 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 40-60 |
| இராசவள்ளி | 250 | 220 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 220 | 220 | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 90 | 50 | 80 |

# இனவாதிகளின் சிறைப்பிடிக்குள் ரணில், சஜித்; பெரமுனவின் பிரதியே ஐக்கிய மக்கள் சக்தி

## மங்கள சுட்டிக்காட்டு

தென்னிலங்கை வாக்குகளுக்காக சிங்கள, பேரினவாதத்தினை முன்னிலைப்படுத்தும் பொதுஜனபெரமுனவின் பிரதியாகவே ஐக்கிய மக்கள் சக்தியும் காணப்படுகின்றது என முன்னாள் நிதி மற்றும் வெகுஜன, தகவல் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்து தலைமைத்துவம் வழங்கும் வகையிலான நிலைப் பாடுகளை வெளிப்படுத்தவோ அல்லது வலுவான எதிர்க்கட்சி என்ற வகிபாகத்தினை வகிப்பதற்காக வெளிப்படையான கருத்துக்களை வெளியிடவோ, செயற்பாடுகளை முன்னெடுக்கவோ தயாராக இல்லை என்றும் தெரிவித்தார். மாற்று சக்தி என்பதற்கான கொள்கைகள் உட்பட எந்தவிதமான இலட்சணங்களும் காணப்படவில்லை.

நாட்டில் ஜனநாயக விழுமியங்கள் நிறைந்த இனவாத மற்ற புதிய அரசியல் கலாசாரத்தினை கட்டியெழுப்புவதற்கான வலுவான சக்தியொன்றை எதிர்பார்த்து பொதுமக்கள் இருக்கையில் எவ்விதமான கொள்கைகளோ, இலக்குகளோ இல்லாத கையறு நிலையில் தான் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் காணப்படுகின்றன.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் தனிப்பட்ட முறையில் சிறந்தவர்களாக இருக்கின்றபோதும் அடிப்படைவாதிகளின் சிறைப்பிடிக்குள் சிக்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய நாட்டை இராணுவ ஆட்சிக்குள் நகர்த்திச் செல்கின்றார். நாட்டின் நல்லொழுக்கத்தினை கட்டியெழுப்புவதற்கு இராணுவத்தை முன்னிலைப்படுத்திய செயலணியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆட்டோ சார்திகள் சங்கத் தலைவர்கொலை, துப்பாக்கிசாரம் என்று சட்டத்தின் ஆட்சி கேள்விக்குறியாகியுள்ளது. எமது ஆட்சிக்காலத்தில் நாட்டில் காணப்பட்ட நிலைமைகள் நேரெதிராக மாறியுள்ளன.

இவைபற்றி எதிரணியாக அல்லது நாட்டிற்கு தலைமைத்துவம் வழங்கத்தயாராகும் மாற்று அரசியல் அணியாக உரிய நிலைப்பாடுகளை வெளிப்படுத்த வேண்டும். அதில் பின்னிற்கவே முடியாது.

ஆனால் தேர்தலில் தென்னிலங்கை வாக்குகள் சரிவடைந்துவிடும் என்ற மாயைக்குள் சிக்கி மௌனம் காத்துக் கொண்டிருக்கும்போக்குடைய அரசியலை ஏற்றுக்கொள்ளமுடியாதுஎன்றும்அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# பொதுத்தேர்தலில் அரசாங்கம் தோல்வியடைவது உறுதி-கயந்த



(கொழும்பு)

மக்களை ஏமாற்றியே இந்த அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியது. எனவே தற்போதைய சூழ்நிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் அரசாங்கம் நிச்சயம் தோல்வியடையுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

நாட்டின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களின் விலையை மீண்டும் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளது என்றும் அத்துடன் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறும் நோக்கத்துடனேயே தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்துள்ளது.

எனினும் தற்போது 113 ஆசனங்களை பெறுவதற்கு கூட அரசாங்கம் நெருக்கடியை சந்தித்துள்ளது என்றும் மேலும் கடந்த தேர்தலில் மக்களை ஏமாற்றியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# 87ஆவது அகவை காணும் ஆனந்தசங்கரி



1960 ஜூலை மாதம் இலங்கை பாராளுமன்றத் தேர்தல் காலம். கிளிநொச்சி தொகுதியின் பழைய ஊர், இயக்கச்சி சந்தை மைதானம். இலங்கை சமசமாஜக் கட்சியின் பிரசாரக் கூட்டம். அக்கட்சியின் வேட்பாளர். ஆம், அவர் தான் வீரசிங்கம் ஆனந்தசங்கரி. இக்கூட்டத்தில் இலங்கையின் தலைசிறந்த தலைவர், நேர்மையானவர், உயர்ந்த பண்பாளர்என்எம்.பெரேரா அந்த இளைஞனை அறிமுகம் செய்கிறார்.

நான் உங்களுக்கு ஒரு இளைஞரைத் தருகிறேன். அவர் உங்கள் தொகுதியைத் தன் அரசியல் வாழ்வில் உயரவும் வளப்படுத்தவும் செய்வார். அந்தச் சிந்தனையாளரின் வாக்கு உண்மையாகவே பொய்க்கவில்லை. அதற்கு இன்றைய கிளிநொச்சி மாவட்டம் சான்று. கிளிநொச்சித் தொகுதி அன்று இன்றைய நிலையில் இல்லை. ஒரு சில பண முதலைகளின் இரும்புக் கரத்தில் கட்டுண்டு கிடந்தது. கிராமங்கள் நிலப்பிரபுக்களின், சாதி வெறியர்களின் அடக்கு முறையால் அலைக்கழிந்தது.

இந்த நிலையை மாற்றத் துடித்தவர்தான் ஆனந்தசங்கரி. இக்கொடுமைக்கு எதிராக மேடைகள் தோறும் முழங்கினார். உங்களின் கரங்களில் மாட்டப்பட்ட விலங்குகளை நீங்கள் தான் உடைக்க வேண்டும். தானாக எதுவும் மாறாது என்றார். இவரின் பேச்சுக்கள் கிளிநொச்சியில் இளைஞர்களைச் சிந்திக்கத் தூண்டியது. மாக்சிசவாதக் கருத்துக்கள் வேரோடின. ஒடுக்குமுறைக்கு எதிராக நிமிர்ந்தனர். இந்நிலையை உருவாக்கியவரை மக்களின் ஒரு பகுதியினர் ஆழமாக நேசித்தனர். தங்கள் விலங்கொடிக்க வந்த வீரனாகப் போற்றினர். தங்களின் வாழ்வையும் வளத்தையும் பெருக்க, இனவாத அரசியல் தலைமையை ஆதரித்தவர்கள் சங்கரியைக் கண்டு அஞ்சினர்.

சில வருடங்களுக்குப் பிறகு கரைச்சிக் கிராமசபைத் தேர்தல் வந்தது. அத்தேர்தலில் தன் எண்ணத்தையும் சிந்தனையையும் விதைக்க ஆனந்த சங்கரி முற்பட்டார். இதனால் சகல வட்டாரங்களிலும் தனது வேட்பாளர்களை நிறுத்தியதுடன் தானும் போட்டியிட்டார். தொழிலாளர்கள் வாழ்கின்ற ஆனையிறவு வட்டாரத்தில் போட்டியிட்ட இவர் வெற்றிபெற்றதுடன் பல வட்டாரங்களில் அவரின் ஆதரவாளர்களும் வெற்றி பெற்றனர். இதனால் கிளிநொச்சியின் இதயபூமி இவரின் ஆளுகைக்குட்பட்டது.

கரைச்சிக் கிராமச்சபையில் ஆனந்தசங்கரியின் ஆட்சிக் காலம் ஒரு பொற்காலமே. கிளிநொச்சிக்கு முதன்முதலாக ஒரு தரமான நூல் நிலையத்தை கரடிப்போக்குச் சந்தியில் உருவாக்கினார்.

இந்நூல் நிலையத்தில் அரிய பல நூல்களும் அரசியல் ஆய்வுப் புத்தகங்களும் இருந்தன. இது இப்பகுதி இளைஞர்களின் அறிவுப் பசிக்கு மட்டுமல்ல சமூகமாற்றத்திற்கும் துணை புரிந்தன. பல ஆயிரம் ரூபாய்களை வருமான வரியாகக் கொடுத்தும் கிளிநொச்சி சந்தையை ஏலத்திற்கு விடும் முறையை நீக்கி, வரியை அறவிடும் முறையை ஏற்படுத்தினார்.

இதுபல வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில் வழங்கியதுடன் ஒரு முறையான நிர்வாகத்தையும் ஏற்படுத்தியது. இது உண்மையாகவேமக்களை மகிழ வைத்தது. சந்தையை அழகு படுத்தியதுடன் நில்லாமல் பல ஆயுர்வேத மருந்தகங்கள், வீதிகள், பொதுக்கிணறுகள் என அமைத்து மக்களின் தேவையை பூர்த்தி செய்தார்.

தங்களின்ஆற்றலைவெளிப்படுத்த முடியாத கலைஞர்களை, சிந்தனையாளர்களை, கவிஞர்களை ஒருமுகப்படுத்தி தொகுதியே அதிசயிக்கும் ஒரு மாபெரும் கலை விழாவை (சாகித்தியவிழா) இரண்டு தினங்கள் கிளிநொச்சியில் நடத்தினார். இது அனைவரையும் மாவட்டத்தையே திரும்பிப் பார்க்க வைத்தது. கரைச்சி கிராம சபையின் சங்கரியின் சேவை அவரின் அரசியல் இருப்பை ஆழப்படுத்தியது.

அக்காலத்தில் கிளிநொச்சிக் குளத்து நீர் ஒரு சிலரின் ஏகபோகமாக இருந்தது. குடியேற்றவாசிகள் வஞ்சிக்கப்பட்டார்கள். இதைப் போக்க துடித்த சங்கரி குடியேற்றவாசிகளும் உரிய பங்கைப் பெற போராட்டம் ஒன்றைத் தொடங்கினர். குடியேற்றவாசிகளின் ஒத்துழைப்பும் கருத்து மோதலும் வெற்றியைக் கொடுத்தது. இதுவும் சங்கரியின் இருப்பை உயர்த்தியது.

இக்காலத்தில் தென்னிலங்கை இடதுசாரி அரசியல் வாதிகளின் இனவாதப்போக்கு சங்கரிக்கு மன அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கலாம். தான் நம்பியிருந்த தலைவர்கள் இடதுசாரிக் கொள்கையில் இருந்து நழுவல் போக்கைக் கடைப்பிடிப்பதாக உணர்ந்தபடியால் ஓர் அறிக்கை மூலம் கட்சியை விட்டு வெளியேறினார். சில வருடங்களுக்குப் பின்னர் 1970 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் கிளிநொச்சி தொகுதியில் இவர் வெற்றி பெற்றார்.

இவ்வெற்றியானது இவரின் ஆழமான அரசியல் சேவைக்கு மக்கள் கொடுத்த ஆணையாகவே பார்க்கப்பட்டது. இவர் தனது பதவிக்காலத்தில் கிளிநொச்சி தொகுதியில் அளவிட முடியாத பல சேவைகளைச் செய்துள்ளார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக கிளிநொச்சித் தொகுதியை தனிமாவட்டம் ஆக்கியது மகுடமாகும். மாவட்டம் தனியாக்கப்பட்ட பின்பே பல இளைஞர்கள் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, பட்டதாரிகளாக வருவதற்கு துணைபுரிந்தது. இந்நிலையை ஆக்கியோனை இன்றும் நினைப்பவர்கள் பலர் இருக்கவே செய்கின்றனர்.

ஆம், இம்மாவட்டம் உருவாகியதன் பின்பே வளங்கள், வசதிகள், வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதார மேம்பாடு, நீர்ப்பாசன முறை, குடியேற்ற வசதிகள் என்பன துரித வளர்ச்சி கண்டன.

மேலும் தென்னிலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி வந்த மலையக மக்களை, தனது உறவுகளாக உணர்ந்து அவர்களுக்கு வேண்டிய உதவியைப் புரிந்ததுடன் நில்லாமல் நகரத்தின் இதய பூமியையே அவர்களுக்கு வழங்கினார்.

தான் வளர்ந்த, தன்னை வளர்த்த கிளிநொச்சி மண்ணும் மண் சார்ந்த மக்களும் யுத்தத்தில்சின்னாபின்னப்படுவதை தாங்க முடியாமல் தான் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத போதும் யுத்தம் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களுக்கும் இறுதிவரை வேண்டுகோள் விடுத்தார். ஆனால் நிலைமை கைமீறிப் போய் விட்டது.

நாடும் நாமும் நலம்பெற கடந்தகாலத்தைச்சிந்திப்போம். வரலாறு தான் நமக்கு நல்ல ஆசான்.

87ஆவது பிறந்தநாள் இவ்வேளையில் ஆனந்த சங்கரியோடு பல ஆண்டுகள் பயணித்தவன் என்ற காரணத்தால்அவர்தொடர்ந்தும்பல்லாண்டுகள்வாழவாழ்த்துகின்றேன்.

**வன்னி அ.முருகேசு,**
**செல்வபுரம், முறிகண்டி.**

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2020 - 15.07.2020



சார்வரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குரு பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. விரய ஸ்தானத்தில் விரயாதிபதி புதன் வக்கிரம்பெற்று சஞ்சரிக்கிறார். இலாப ஸ்தானத்தில் சுக்கிரன் வக்கிரம் பெற்றுள்ளார். இம்மாதம் தேவைக்கேற்ற வருமானம் வந்து கொண்டேயிருக்கும். திடீர், திடீரென வரும் செலவுகளைச் சமாளிப்பீர்கள்.

மீன- செவ்வாய் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய், ஜூன் 20 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்கிறார். எனவே பெற்றோர் வழியில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். சொத்துக்களை பங்கிட்டுக் கொள்வதில் இருந்த தகராறுகள் தானாக விலகும். உடன்பிறந்தவர்கள் உங்கள் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பார்கள். வள்ளல்களின் ஒத்துழைப்பும், வங்கிகளின் ஒத்துழைப்பும் கிடைத்து வாழ்க்கைப் பாதையை சீராக்கிக் கொள்வீர்கள். தாமதித்து வந்த வேலை வாய்ப்புகள் கூட தானாக வரலாம்.

ரிஷப, மிதுன - புதன் சஞ்சாரங்கள்

ஜூன் 20 ஆம் திகதி ரிஷப இராசிக்குப் புதன் செல்கிறார். விரயாதிபதி புதன் இலாப ஸ்தானத்திற்குச் செல்லும் இந்த நேரத்தில், சுபச் செய்திகள் வந்த வண்ணம் இருக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். வெளிநாட்டில் இருக்கும் உறவினர்கள் அனுகூலமான தகவலைத் தருவர். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட உகந்த நேரமாக இந்த நேரம் அமையும். ஒரு சிலருக்கு, புதன் சகோதர ஸ்தானத்திற்கும் அதிபதியாக விளங்குவதால், உடன்பிறந்தவர்களால் கூடுதல் நன்மை கிடைக்கும். ஜூலை 4 ஆம் திகதி மிதுனத்திற்கு புதன் செல்கின்றார். இக்காலத்தில் எதிர்பாராத சில நல்ல மாற்றங்கள் வந்து




சேரும். வாங்கல்-கொடுக்கல்கள் ஒழுங்காகும். வியாபாரப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். பிள்ளைகளின் கல்விக்கான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கட்டுமானப் பணிகளில் கவனம் செலுத்துவீர்கள். உங்கள் ஆற்றல் வெளிப்படும் நேரமிது.

தனுசு - குரு சஞ்சாரம்

ஜூலை 8 ஆம் திகதி, தனுசு இராசிக்கு குரு வக்கிர இயக்கத்தில் வருகிறார். இக்காலத்தில் கூடுதல் கவனம் தேவை. அலைச்சலைக் குறைத்துக் கொள்ளுங்கள். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. உடல் சோர்வும், மனச்சோர்வும் ஏற்படும். கடல் கடந்து வசிக்கும் உறவினர்கள் கவலை தீர்ந்தது என்று தகவல் கொடுப்பார்கள். அடகுவைத்த பொருட்களை மீட்கும் வாய்ப்பு கிடைக்கும். தொழில் ரீதியாக துணிந்து சில முடிவுகளை எடுத்து, அதில் லாபகரமான வெற்றியைக் காண்பீர்கள். இந்த மாதம் இல்லத்து பூஜையறையில் சிவன் படம் வைத்து, சிவ கவசம் பாடி சிவபெருமானை வழிபடுவது நல்லது.

சார்வரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் இலாப ஸ்தானத்தில் இலாபாதிபதி புதனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். புதன் வக்கிரம் பெற்றிருந்தாலும் புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். செவ்வாயின் பார்வை, உங்கள் இராசியில் பதிவதால் பூமி யோகம் உண்டு. உடன்பிறப்புகள், உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துக்கொடுப்பர்.

மீன - செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 20 ஆம் திகதி, செவ்வாய் மீன இராசிக்குச் செல்கிறார். இந்தக்காலத்தில் செய்யும் காரியங்களில் கூடுதல் கவனம் தேவை. எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. வாழ்க்கையில் அலுப்பும், சலிப்பும் அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லையால் அவதிப்படுவீர்கள். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். 'சம்பாதித்ததை சேமிக்க முடியவி



ல்லையே' என்று கவலைப்படுவீர்கள். நல்ல சந்தர்ப்பங்கள் நாடி வந்தாலும், அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது.

ரிஷப, மிதுன - புதன் சஞ்சாரங்கள்

ஜூன்20 ஆம் திகதி ரிஷப இராசிக்கு, புதன் செல்கிறார். தன இலாபாதிபதியான புதன், வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் தன வரவில் தடுமாற்றங்கள் ஏற்படும். கோபதாபங்களையும் வாக்குவாதங்களையும் தவிர்ப்பது நல்லது. மூடிக்கிடந்த தொழிலை மீண்டும் நடத்தலாமா அல்லது அதை யாரிடமாவது கொடுத்துவிடலாமா என்பது பற்றி யோசிப்பீர்கள்.

உத்தியோகத்தில் ஒருசிலருக்கு பணி நீக்கம் செய்யக்கூடிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம். ஜூலை 4 ஆம் திகதி மிதுனத்திற்கு புதன் வருகிறார். இது ஒரு பொற்காலமாக அமையும். அடகு வைத்து வந்த பொருட்களை மீட்டு வரும் சூழ்நிலை உருவாகும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்துவீர்கள். அவர்களின் மேற்படிப்பு சம்பந்தமாக என்ன செய்யலாம் என்ற சிந்தனை மேலோங்கும்.

தனுசு - குரு சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் நீச்சம் பெற்றிருந்த குரு, ஜூலை 8 ஆம் திகதி அதன் சொந்த வீடான தனுசு இராசிக்கு வக்கிர இயக்கத்தில் வருகிறார்.

அங்கிருந்து உங்கள் இராசியைப் பார்ப்பது யோகம்தான். இதனால் வாழ்வின் தடுமாற்றங்கள் அகலும். தனவரவு திருப்தி தரும். பணி மாற்றங்கள் கூட எதிர்பார்த்தபடி வந்து சேரலாம். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். வியாபாரப் போட்டிகள் அகலும்.

பூர்வீக சொத்துக்களால் இலாபம்




உண்டு. உத்தியோகத்தில்உள்ளவர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் மீண்டும் கிடைக்கலாம். இம்மாதம் இல்லத்தில் சண்முகநாதர் படம் வைத்து வழிபடுங்கள்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

சார்வரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் வக்கிரம்பெற்று, விர யாதிபதி சூரியனோடு இணைந்து 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு இராகுவும் இணைந்திருக்கிறார். எனவே ஆரோக்கியம் முதல் அனைத்து செயற்பாடுகளிலும் கவலைகளே அதிகரிக்கும். பொறுப்புகளை நிறைவேற்ற முடியாமல் தத்தளிப்பீர்கள். அர்த்தாஷ்டமச் சனி, அர்த்தாஷ்டம கேது மாறும் வரை பொறுமையோடு செயற்படுங்கள்.

மீன - செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 20 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், சப்தம ஸ்தானத்திற்கு வருகிறார். செவ்வாய் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்த்த பலன் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். உடன்பிறப்புகள் உங்களுக்கு பகையாக மாற வாய்ப்பிருக்கிறது. ஒரு சிலர், இடம், பூமி மற்றும் விலையுயர்ந்த பொருட்களை விற்கவும் நேரிடும்.

ரிஷப, மிதுன - புதன் சஞ்சாரங்கள்

உங்கள் இராசிநாதனாக விளங்கும்





புதன், ஜூன் 20 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்திற்கு வக்கிர இயக்கத் தில் வருகிறார். இக்காலத்தில் பெற்றோர்களின் ஆதரவு ஓரளவு கிடைக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். தொழில் மாற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள்.

உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்யப்படும் சூழ்நிலை அமைந்தவர்களுக்கு, மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உருவாகும். ஜூலை 4 ஆம் திகதி மிதுன இராசிக்கு, புதன் செல்கிறார். இக்காலம் ஒரு இனிய காலமாக அமையும். ஒரு சிலர் சுயதொழில் செய்யலாமா என்று சிந்திப்பர். விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும். அரசாங்கம் மூலம் எதிர்பார்த்த சலுகைகளும் உண்டு. பணிபுரியும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாக அகலும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிடிவாத குணத்தை கொஞ்சம் தளர்த்திக் கொள்வது நல்லது.

தனுசு - குரு சஞ்சாரம்

ஜூலை 8 ஆம் திகதி தனுசு இராசிக்கு குரு வருகிறார். வக்கிர இயக்கத்தில் தன் சொந்த வீட்டிற்கு வரும் குரு, அர்த்தாஷ்டம குருவாக மாறுகிறார். அர்த்தாஷ்டமச் சனியும், அர்த்தாஷ்டம கேதுவும் இந்த அர்த்தாஷ்டம குருவோடு சேர்கின்றன. எனவே இக்காலத்தில் மனநிம்மதி குறையும்.



பணவரவில் தடை அதிகரிக்கும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். வாங்கிய கடனைக் கொடுக்க இயலாது. கொடுத்த கடனை வசூல் செய்யவும் இயலாது. எதிலும் இரட்டிப்பு செலவு ஏற்பட்டு மன அமைதியை குறைக்கும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் இல்லத்தில் ராமர் பட்டாபிஷேக படம் வைத்து அனுமன் கவசம் படியுங்கள்.




## அறிவுரைகளை ஆராய்ந்து செயற்படு

ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு கொடிய விஷமுள்ள பாம்பு வாழ்ந்து வந்தது. ஊர் மக்கள் யாராவது அதன் புற்றின் பக்கம் போனால் சீறி வந்து கொத்தி விடும். பாம்புப் புற்று இருந்த பாதை அந்த ஊருக்கும் பக்கத்து சந்தைக்கும் குறுக்கு வழி.

பாம்புக்கு பயந்தே ஊர் மக்கள் பல தொலைவு சுற்றி அந்த சந்தைக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள். வேறு வழியில்லாததால் சலிப்புடனேயே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒருநாள் அந்த ஊருக்கு ஒரு யோகி வந்தார். அவர் மிருகங்களிடம் பேசக்கூடிய வரம் பெற்றவர். ஊர் மக்கள் தங்கள் குறையை அவரிடம் முறையிட்டனர்.


அவர் பாம்பி டம் பேசி அதற்கு ஊர் மக்களை கடிக்கக் கூடாது என்று கட்டளை இட்டு விட்டு பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார். பாம்பும் அவர் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடந்தது.

ஆனால் ஊர்மக்கள் சும்மாயில்லை. வழியே போகும் சிறுவனுக்குக் கூட பாம்பிடம் இருந்த பயம் போய்விட்டது. பாம்பைக் கண்டால் அதைக் கல்லால் அடிப்பது, துன்புறுத்துவது, விரட்டியடிப்பது என்று அதன் வாழ்க்கையை நிம்மதியில்லாமல் செய்து கொண்டிருந்தனர். உடம்பில் பல காயங்களுடன் குற்றுயிரும் குலையுயிருமாகி விட்டது பாம்பு.

யோகி ஒருநாள் பாம்புப் புற்று இருந்த வழியாக ஊருக்குள் திரும்ப வரும் போது பாம்பின் பரிதாபமான நிலையைக் கண்டு அதனை விசாரித்தார். பாம்பும் நடந்த கதையையெல்லாம் கூறி அழுதது.

யோகி பாம்பைப் பார்த்து "அட முட்டாள் பாம்பே! உன்னை மக்களைக் கடிக்கவேண்டாம் என்றுதானே கூறிச் சென்றேன். பக்கத்தில் வருபவனைப் பார்த்து சீறாதே என்று ஒரு போதும் சொல்லவில்லையே" என்று கேட்டார். இதற்குப் பின் பாம்பும் பிழைத்துக் கொண்டது.

## நிறந்தீட்டுங்கள்



## சிறுவர் சிந்தனைத் துளிகள்

- அளவில்லாத வேதனைகளை தாங்கிக்கொண்டு சாதனை படைக்கிறவன் தான் மேதை.
- கடமையைச் செய்யுங்கள் புகழ் உங்கள் காலடியில் தேடிவரும்.
- யாரையும் யாராலும் திருத்த முடியாது. அதனால் நீ முதலில் உன்னைத் திருத்து.
- தவறு செய்து விட்டோம் என தெரிந்தும் அதை ஒப்புக்கொள்ள வெட்கப்படாதே.
- உலகிலேயே துயரம் நிறைந்த மனிதன் எதிலும் தயக்கம் காட்டுபவன்தான்.
- பேச்சு பெரிது தான். ஆனால் மௌனம் அதனிலும் பெரிது.

உருவில் உள்ள 10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



## பொலிஸ் அதிகாரி விபத்தில் உயிரிழப்பு



(கொழும்பு)

அரச புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரி விபத்தில் சிக்கி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்தார்.

கடந்த 11 ஆம் திகதி தும்முல்ல பகுதியில் வைத்து குறித்த பொலிஸ் அதிகாரி மற்றும் மற்றுமொரு பொலிஸ் அதிகாரி பயணித்த டிபெண்டர் வாகனம் விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை குறித்த பொலிஸ் அதிகாரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஜ-4)

## நாட்டில் 43 அடிப்படைவாத அமைப்புக்கள் செயற்படுகின்றன

### ஞானசார தேரர் சாட்சியம்



(கொழும்பு)

**நாட்டில் சுமார் 43 முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்கள் செயற்படுவதாக பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் சங்கைக்குரிய கலகொட அத்தே ஞானசார தேரர் சுட்டிக்காட்டினார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சாட்சியமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம்தொடர்பாக ஞானசார தேரர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "நாட்டில் அடிப்படைவாத இஸ்லாமிய கொள்கைகளை கொண்ட தப்லிக் ஜமாஅத் வாதம், வகாப் வாதம், சலஃபி வாதம், ஜமாஅத்தே இஸ்லாம் ஆகிய பிரதான 4 குழுக்கள் காணப்படுகின்றன.

இந்தக் குழுக்கள் வெவ்வேறு பெயர்களில் இயங்கினாலும் ஒன்றுகூடி செயற்பட்டு வருகின்றன என்றும் சாட்சியத்தில் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## பூஸா தனிமைப்படுத்தல் முகாமிலிருந்து இதுவரை 302 பேர் வெளியேற்றம்

(கொழும்பு)

பூஸா தனிமைப்படுத்தல் முகாமில், தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவு செய்த மேலும் 16 பேர் நேற்று வெளியேறினர்.



அவர்களுக்கு தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை முறையாக நிறைவு செய்தமைக்கான சான்றிதழும் கடற்படையினரால் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை பூஸா தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை முறையாக நிறைவு செய்த 302 பேர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

அதேபோல் 86 பேர் தொடர்ந்தும் அங்கு தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)

# குருவிக் காட்டில் வனவளத் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் - அங்கஜன் உறுதி

(சாவகச்சேரி)

தென்மராட்சி-குருவிக் காட்டுப் பகுதியில் இடம்பெறுகின்ற வனவளத் திணைக்களத்தின் எல்லைப்படுத்தல் மற்றும் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தென்மராட்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது சரசாலை-குருவிக்காட்டில் இடம்பெறுகின்ற வனவளத் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புச் செயற்பாடு தொடர்பாக ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,



சரசாலையில் இடம்பெறுகின்ற இச் செயற்பாடு தொடர்பாக காணி மற்றும் வன இலாகா அமைச்சரிடமும் செயலாளருடனும் கலந்துரையாடி இது தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளதாகவும் இவ் விடயம் தொடர்பாக ஆராய்ந்து வனவளத் திணைக்களத்தின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக அமைச்சின் செயலாளர் தமக்கு உறுதியளித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-5-30)

## சுற்றிவளைப்புகளில் 411 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் காலை 6 மணிமுதல் நேற்று அதிகாலை வரையில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 411 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த 170 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 69 கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை கஞ்சா மற்றும் சட்டவிரோத மதுபானங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 204 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-8)

# 8 இலட்சம் பெறுமதியான மரக்குற்றிகளுடன் வாகனம் பறிமுதல், சாரதி தப்பியோட்டம்


(பரந்தன்)

கிளிநொச்சி பூநகரி வெட்டுக்காடு காட்டுப் பகுதியில் முதிரைக்குற்றிகளுடன் வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வெட்டுக்காட்டு பகுதியில் சட்டவிரோதமாக காடுகளை அழித்து முதிரைக்குற்றிகள் கடத்தப்படுவதாக பூநகரி பொலிஸ் நிலைய புலனாய்வுத்துறையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பூநகரி பொலிஸாரும் புலனாய் வுத் துறையினரும் சம்பவ இடத்திற்கு சென்ற போது பரமன்கிராய்ப் பகுதியில் முதிரைக்குற்றிகள்ள ஏற்றிவந்த வாகனத்தினை வழிமறித்தனர்.

இந்நிலையில் சாரதி வாகனத்தை விட்டுத்தப்பி சென்றுள்ளார் என்றும் கைப்பற்றப்பட்ட முதிரைக்குற்றிகள் சுமார் 8 இலட்சம் ரூபாய் பெறுமதியானவை என்றும் கூறினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-5-312)





மன்னார் தள்ளாடி 54 ஆவது இராணுவ படைப் பிரிவின் ஏற்பாட்டில் நேற்று தள்ளாடி படை முகாமில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஏ.ஏ.ஐ.ஜே. பண்டாரவின் பணிப்புரைக்கு அமைவாக நேற்று தள்ளாடி முகாமில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. இதில் சுமார் 150 இராணுவத்தினர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

(படம்:- மன்னார் செய்தியாளர்)

# ஊரின் நடுவிலுள்ள மண் அணையை அகற்ற பொதுமக்கள் கோரிக்கை

(சிவநகர்)

யுத்தகாலத்தில் கிளிநொச்சி சிவநகர் கிராமத்தின் நடுப் பகுதியில் போடப்பட்டமண் அணை இதுவரை அகற்றப்படாத நிலையில் உள்ளது.

சிவநகரில் அ.த.க. பாடசாலை, சிவாலயம், செந்தூரன் முன்பள்ளி, பொதுமண்டபம், சனசமூகநிலையம், மூத்தோர் சங்கம், ஆரம்ப சுகாதார நிலையம், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம் என்பனவும் குடியிருப்புக்கள் அமைந்துள்ள நடுப்பகுதியில் இந்த மண் அணை அழிக்கப்படாத நிலையில் பல வருட காலமாக உள்ளது. இந்த மண் அணைப் பகுதியில் வெடிபொருட்களும் இருக்கலாமென அஞ்சப்படுவதால் இந்த மண் அணை அமைந்துள்ள பகுதி பற்றைக்காடுகளாகக் காணப்படுகிறது.

இது தொடர்பாக பல தடவைகள் உரியவர்களிடம் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு பொதுமக்களாலும் பொது அமைப்புக்களாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.(2-5-254)

# இரத்ததானத்திற்கு விருது பெற்ற யாழ்.இளைஞன்



(குப்பிழான்)

சர்வதேச குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு கொழும்பு நாரஹேன்பிட்டி தேசிய குருதி மாற்றுப் பிரயோக சேவை மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தேசிய குருதிக் கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இதில் கீரிமலை கருகம்பனையைச் சேர்ந்த சண்முகரத்தினம் லக்ஸன் (வயது-31) விசேட விருதும் சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். தேசிய குருதி மாற்றுப் பிரயோக சேவையின் பதில் பணிப்பாளர் சந்தனி விதானகே இவருக்கான கௌரவத்தை வழங்கினார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தரான லக்ஸன் இதுவரை 33 தடவைகள் இரத்ததானம் வழங்கியுள்ளதுடன் யாழ்.மாவட்டத்தில் நடமாடும் இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்வதில் முன்னின்றும் செயற்பட்டு வருகிறார்.(2-5-18)

# ஒருவாழை, இருகுலை இளவாலையில் அதிசயம்



(குப்பிழான்)

இளவாலையைச் சேர்ந்த மகேந்திரம் என்பவருக்குச் சொந்தமான வாழைத் தோட்டத்தில் ஒரு வாழை மரம் இரண்டு குலைகளை ஈன்றுள்ளது பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.


இவ் விடயத்தை அறிந்த ஊர்மக்கள் இவ் அதிசயத்தைப் பார்வையிட்டு வருகின்றனர். (2-5-18)

# வெடிபொருள் செயலிழப்பு

(முறிகண்டி)


பரந்தன் முல்லை வீதியில் சந்தேகத்திற்கிடமான வெடிபொருள் பாதுகாப்பான முறையில் செயலிழப்பு செய்யப்பட்டது.

குறித்த சந்தேகத்திற்கிடமான பொருள் தொடர்பில் விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பாதுகாப்பாக செயலிழக்கம் செய்யப்பட்டது. (2-5-100)



# “நெஞ்சில் நிறைந்த நினைவுகளின் துயரோடு மக்கள்”

தென்னிந்திய சினிமா வரலாற்றில் “ஆட்டோகிராப்” திரைப் படம் ஒரு மைல் கல். மனித வாழ்வின் கடந்த காலங்களைப் புரட்டிப் பார்ப்பதால் அது மாபெரும் வெற்றிப் படமாகவும் அமைந்தது. அப்படத்தினைப் பார்க்கின்ற அனைவரையும் அப்படம் கடந்த காலத்திற்குள் நிச்சயம் அழைத்துச் செல்லும். அது போலவே ஒவ்வொரு ஆண்டும் கடந்து போகின்ற ஜூன் 15 ஆம் திகதி, காங்கேசன்துறை மக்கள் அனைவரையும் காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லும் இன்றும் அப்படி ஒரு ஜூன்15. ஆனால் இது வித்தியாசமானது. ஏனெனில் முப்பது வருடங்களைக் கடந்து செல்கின்ற அதே வேளையில்... இந்த மண் எங்கள் கைகளுக்கு எப்பொழுது முழுமையாகக் கிடைக்கும் என்ற ஏக்கங்களையும் எழுப்பி நிற்கின்றது. இது மிகவும் வேதனையான காலகட்டம் என்றால் அது மிகையில்லை என்றே கூறத் தோன்றுகின்றது.



# காங்கேசன்துறை கைவிட்டுச் சென்று இன்றுடன் 30 வருடங்களைக் கடக்கின்றது..!

## வளங்கள் நிறைந்த பூமி

வடக்கே நீண்டு விரியும் வங்காள விரிகுடாக் கடல், தெற்கே மாவிட்டபுரம், மேற்கிலே கீரிமலையும், கிழ க்கிலே மயிலிட்டியுமாய் எல்லைக ளைக் கொண்ட ஓர் சிறு நகரமாக மாற்றம் பெற்றுவந்தது தான் காங்கேசன் துறையின் தனிச்சிறப்பு.

கடல்வளம், பனைவளம், விவசாயம், கைத்தொழில்கள் மட்டுமல்ல சீமெந்துத் தொழிற்சாலை, துறைமுகம், பண்டகசாலை/ களஞ்சியசாலை (இன்றைய தல்செவன) புகையிரத நிலையம், மீன்பிடித் துறைமுகங்கள், சினிமாத் தியேட்டர்கள், கப்பல் கம்பனிகள், பட்டண சபைக்கட்டடங்கள், புகழ் பூத்த கல்லூரிகள் என்று ஒரு நகரக் கட்டமைப்பைக் கொண்டு வளர்ந்து வந்த காங்கேசன்துறை, சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் காவிரிப் பூம் பட்டினத்தின் வளத்திற்கு நிகராக விளங்கி வந்தது என்றால் அது புகழ்ச்சி இல்லை.

காங்கேசன்துறை பற்றி அறிந்த எவரும் எந்தத்திக்கில் இருந்தாலும் இவ் உண்மையை கண்மூடி ஏற்றுக் கொள்வர். இப்படிப்பட்ட பூமி இன்று காணப்படும் கோலத்தை எடுத்துச் சொல்வதென்றால், ஆட்டோகிராப் படத்தில் இடம்பெறும் “ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே...” என்ற பாடலைத்தான் மனத்தில் நிறுத்திப் பார்க்க வேண்டும். அவ்வளவிற்கு இன்று அடையாளங்கள் தெரியாமல் சிதைந்து அழிந்து காணப்படுகின்றது அந்த அழகிய பூமி.

## பொக்கிஷமான நினைவுகள்...

சிதைக்கப்பட்ட இம் மண்ணில் காலடி எடுத்து வைத்தாலே.. பொக்கிஷமான நினைவுகள் மனதில் நிறைந்து காற்றில் கரைந்து செல்லும்... அந்த ஏக்கப் பெருமூச்சுக்கள் அம் மண்ணின் ஒவ்வொருவர் மனத்திலும் நிழலாடுவதை அவர்களின் பெருமூச்சுக்களே வெளிப்படுத்துகிறது.

எனக்கு அப்போது ஏழு வயது தான் இருக்கும் என எண்ணுகிறேன். எனது பாட்டியுடன் காங்கேசன்துறைக் கடற்கரையில் இருந்து (இன்றைய தல்செவன) கப்பல் திரு விழா பார்த்த ஞாபகம். எங்கள் ஊரை இந்திரலோகத்திற்கு ஒப்பாகக் காட்டியது.

பகலில் நீலக்கடலாக அழகு தந்த வங்கக் கடல் அன்றிரவு தான் இரு ளோடு இருளாகப் பார்க்க மிகவும் பயந்து போனேன். ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம் ... கடலில் ஒளி வெள்ளத்தோடு கப்பல்கள், தோணிகள், படகுகள் வரிசைகட்டி நின்று வனப்புக் காட்டியது. என்னை அவ் வயதிலும் மெய் மறக்கச் செய்தது. அந்த நாளை அதன்பிறகு நான் என்றுமே காணவே இல்லை. யுத்தம் அந்த சந்தோசங்களைத் தின்று விட்டது.

மேலும் காங்கேசன்துறையிலிருந்து தொண்டைமானாறு செல்வச் சந்நிதிக்கு அதே பாட்டியர் குழாத்துடன் இரவு நேரங்களில் தட்டி வானில் சென்று குச்சி ஐஸ் குடித்ததையும் அந்தக் கூட்டத்தினுள் அண்ணனைத் தொலைத்து விட்டு அந்தரித்த சம்பவங்களும் தொழிற்சாலை விசில் சத்தத்தை மணிக்கூடாகப் பாவித்து பாடசாலைக்கு ரயில் பாதைகளில் ஓடியதையும் தைப்பொங்கல் அன்று பட்டங்கள் பறந்ததையும் என் வாழ்வில் எங்கள் மண்ணில் என்றுமே காண முடியாமல் உள்ளமை நெஞ்சு நிறை துயர் தந்து பாரச்சிலுவையால் மனதை கனக்கச் செய்கிறது.

பெற்ற தாயை இழந்தால் அந்த அன்பு வேறு எங்கும் கிடைக்காதோ.. அதேபோல் தான் எங்கள் மண்ணின் சுகத்தை எங்கும் பெற முடியவில்லை. இடம்பெயர்ந்தவன் குடியேறாதவன் என்றும் தான் இன்றும் நாம் இருக்கின்ற இடங்களில் அழைக்கப்படுகின்றோம். இந்த வேதனையின் ரணம் அனுபவித்துப் பார்ப்பவருக்கு மட்டுமே புலப்படும் உண்மை.

ஆட்சியில் இருப்பவர்களுக்கோ, எம் வேதனைகள் புரிந்திட வாய்ப்பில்லை. காரணம் அவர்கள் இடம்பெயர்வைச் சந்திக்கவில்லை. 30 வருடங்கள் இப்படி ஓர் அவலவாழ்க்கை அவர்கள் சந்திக்கவும் இல்லை.

இராமன் கூட பதினான்கு வருடங்களே அயோத்தியைப் பிரிந்திருந்தான். மகாபாரத்தில் பாண்டவர்கள் கூட பதின்மூன்றாண்டுகள் பொறுத்தது போதும் என்றே பொங்கியெழுந்தனர். ஆனால் எங்கள் துயர் தீர்க்க 30 வருட முடிவிலும் தீர்வு இல்லையே?

இடப்பெயர்வு விரைவில் முடியும் என்றே அனைவரும் நினை த்தோம். அந்த நினைப்பு நீண்டதே ஒழிய இன்றுவரை மீள்குடிமர்வு இன்னும் பலருக்கு எட்டாக்கனியாகவே இருந்து வருகிறது. பறம்பு மலையை விட்டுக்கபிலர் பிரியும் போது கூறுவார் “இந்த மலையைப் பிரிவது மலையைவிடக் கனக்கிறது...” என்று. அதுபோல் தான் எம் அன்னை மண்ணையும் பிரியும் போது கூறினோம். ஆனால் அந்த பிரிவுத்துயர் 30 வருடங்களாகத் தொடர்கிறது. இதற்கு ஒரு முடிவை அனைவரும் பெற்றுத்தர வேண்டும்.

**இரத்தினசிங்கம் விஜய் (ஆசிரியர்)**
**காங்கேசன்துறை.**



கீரிமலை உதவும் கரங்களின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கீரிமலை நகுலேஸ்வரா முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி இரத்ததான முகாமில் பெண்களும் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர்.

(படங்கள்: குப்பிழான் செய்தியாளர்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யின் ஆறாம் இலக்க விடுதி “நட்பு 98” அமைப்பின் நிதி உதவியில் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் முற் பகல் திறந்து வைக்கப்பட்டது. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர். த.சத்தியமூர்த்தி,



வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் வைத்திய அதிகாரிகள், நட்பு 98 அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்-கரணவாய் செய்தியாளர்)

# மோட்டார் சைக்கிள் விபத்து இளைஞன் பரிதாபமாகப் பலி

(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காட்மோர் தோட்ட வீதியில் 13 ஆம் திகதி மாலை மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் பரிதாபமாக உயிரிழந்தான். விபத்தில் உயிழந்தவர் குயின்ஸ்லேன்ட் தோட்டத்திலுள்ள பிரவுன் சுவிக் தோட்டத்தில் வசிக்கும் 22 வயதுடைய ராஜ்குமார் சுமன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். காட்மோர் என்ற இடத்தில் குறித்த இளைஞன் தனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண் டிருந்தபோதே. குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது. பலத்த காயமடைந்த குறித்த இளைஞனை டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு சென்ற போது உயிரிழந்துள்ளார் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.பண்டார தெரிவித்தார்.

அத்துடன் இவ்விபத்து குறித்து மஸ்கெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

# வருமான இழப்பைச் சந்தித்துள்ள மக்களுக்கு சலுகைகளை வழங்க அரசாங்கம் தவறியுள்ளது

## சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**நாட்டில் தற்போது, மோசமான ஆட்சியால்தான் அமைதியின்மை நிலவுகின்றதென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதாரம் வீழ்ச்சிப் பாதையை நோக்கி நகர்ந்து செல்கின்றது.

இதனால் மக்களும் அச்சத்துடன் வாழவேண்டிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

பெரும்பான்மையானமக்கள் வருமான இழப்பினை சந்தித்துள்ளனர்.

அவர்கள் தங்கள் குடும்பங்களிற்கு உணவை வழங்க முடியாத நிலையில் உள்ளனர். இந்த மக்களிற்கு அரசாங்கம் சலுகைகளை வழங்க தவறியுள்ளது.

மேலும் மனிதாபிமானமற்ற அணுகுமுறையை அரசாங்கம் பின்பற்றுகின்றது" என அவர் குற்றம் சாட்டினார். (ஐ-2)

# குண்டுத் தாக்குதல் தொடர்பில் இதுவரை 176 பேர் சாட்சியம்

(கொழும்பு)

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் இதுவரை 176 பேர் சாட்சியம் அளித்துள்ளனர். தாக்குதல் தொடர்பில் இதுவ்ரை 771 பேரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் செயலாளர் எஜ்.என். பி.பீ.ஹேரத் தெரிவித்தார்.

கலகொட அத்தே ஞானசார தேரர். இன்று இரண்டாவது தடவையாகவும் ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகவுள்ளார்.

இதேவேளை, காத்தான்குடி பகுதியில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கடும் போக்குவாத செயற்பாடுகள் குறித்து நாளை விசாரணைகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ-8)

# நாட்டில் குடும்ப ஆட்சியை ஒழிக்கவும் ஐ.தே.க.தலைவரை பதவியிலிருந்து நீக்கவும் நாம் போராட வேண்டியுள்ளது-ஹரீன்

(கொழும்பு)

நாட்டுக்குள்ளும் கட்சிக்குள்ளும் மீண்டும் மீண்டும் ஏகாதிபத்தியத்திற்கு கீழ்ப்படிவதா என்று மக்கள் சிந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி இரு பிரதான விடயங்களுக்காக போராடவுள்ளது.

அவற்றில் முதலாவது நாட்டிலிருந்து ஏகாதிபத்திய குடும்ப ஆட்சியை ஒழிப்பதும், அடுத்தது ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள ஏகாதிபத்திய தலைவரை அந்தப் பதவியிலிருந்து நீக்குவதுமாகும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியினால் "உங்கள் பிரச்சினைகளை எமக்குக் கூறுங்கள்" என்ற தொனிப் பொருளில் தகவல் சேகரிப்பு வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் , இந்த வேலைத்திட்டத்தில் கிடைக்கப் பெறும் தகவல்களை ஜனாதிபதியிடம் கையளித்து அவற்றுக்கு தீர்வினைக் கோரவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

ஆட்சியிலிருப்பவர்கள் தற்போது பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள போதிலும் ஐக்கிய மக்கள் சக்தி மிகுந்த ஒற்றுமையுடனும் பலத்துடனும் செயற்பட்டு வருகிறது.

தற்போது நாட்டு மக்கள் இளம் பிரதமர் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். ஒரு குடும்பம் மாத்திரம் நாட்டை தொடர்ந்தும் ஆட்சி செய்வதா? அல்லது மக்கள் ஆட்சி செய்வதா? என்பதே இதற்கான காரணமாகும்.

எவ்வாறிருப்பினும் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி இரு பிரதான விடயங்களுக்காக போராடவுள்ளது. அவற்றில் முதலாவது நாட்டிலிருந்து ஏகாதிபத்திய குடும்ப ஆட்சியை ஒழிப்பதும் , அடுத்தது ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள ஏகாதிபத்திய தலைவரை அந்த பதவியிலிருந்து நீக்குவதுமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## புவி இயல் விஞ்ஞானம்

ஜேர்மனியிலே தெற்குப் பகுதியிலே ஒரு கிராமம். "வில்சியர்க்" அப்படி என்று பெயர் மிகவும் சின்ன ஊர். மொத்த மக்கள் தொகையே 3300 தான். அந்த ஊரிலே இருக்கின்ற மக்களிலே பல பேருக்கு புற்றுநோய் வந்து கஷ்டப்பட்டார்கள்.

புற்றுநோய் எல்லா ஊரிலேயும் தான் வருகிறது. இருந்தாலும் அந்த ஊரிலே அந்த நோய் வந்து இறந்து போகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. அதற்கு என்ன காரணமாக இருக்கும்? விஞ்ஞானிகளுக்கு இது ஒரு பெரிய மர்மமாக இருந்தது. ஒன்றுமே புரியவில்லை.

1920 , 1929 ஆம் வருடங்களிலே இதைப் பற்றி மூன்று விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். 1920 ஆம் வருடத்திலேயும் இதை ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் சில முடிவுகள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கிராமத்திலே மட்டும் புற்றுநோய் மரணங்கள் அதிகமாக இருப்பதற்கு காரணம் பூமி சம்பந்தப்பட்ட கோளாறுகளாகத் தான் இருக்க வேண்டும் என்பது அவர்களுடைய முடிவு.

பூமிக்கு அடியிலே இருந்து கண்ணுக்குப் புலப்படாத தீய ஒளிக்கதிர் வீச்சுத் தான் புற்று நோயை ஏற்படுத்துகின்றது என்று "வின்சர் மெல்சர்" என்கின்ற ஆராய்ச்சி நிறுவனம் சொல்லியிருக்கிறது. உலகப் புகழ் வெற்ற புவியியல் விஞ்ஞானிகள் சில பேர் அந்த ஊருக்கு புறப்பட்டுப் போனார்கள். பூமிக்கு அடியிலே இருக்கின்ற நீரோட்டப் பாதைகளையெல்லாம் சோதனை செய்தார்கள்.

பூமிக்கு அடியிலே சுமார் 50 மீற்றர் ஆழத்திலே அந்த நீரோட்டப் பாதைகள் அமைந்திருந்தது. உடனே அவர்கள் ஒரு வேலை செய்தார்கள். அந்தக் கிராமத்து வரைபடத்திலே அந்த ஊரிலே இருக்கின்ற வீடுகளை குறித்துக் கொண்டார்கள். பின்பு பூமிக்கு அடியிலே இருக்கின்ற நீர்ப்பாதைகளைக் கண்டு பிடித்தார்கள். அந்தக் கிராமத்து ஜனங்கள் குழாய் மூலமாக தண்ணீர் எடுக்கின்ற இடத்தையும் குறித்துக் கொண்டார்கள். அந்தக் குழாய் மூலமாக வருகின்ற நீரை அவர்கள் உபயோகப்படுத்திக் கொண்டு வருகின்றார்கள் என்பதையும் புரிந்து கொண்டார்கள்.

பூமிக்கு அடியிலே குடிநீர்க் குழாய் போகின்ற பாதைக்கு மேலே வீடுகள் அமைந்திருப்பதையும் பார்த்தார்கள். புற்று நோயைக் கண்டு மரணமடைந்த நோயாளிகள் படுத்திருந்த படுக்கைகளுக்கு மேல் கீழே பூமிக்கு அடியிலே தீய விளைவைத் தரக் கூடிய கதிரியக்கம் இருப்பதையும் கண்டுபிடித்தார்கள். இந்த சோதனை பற்றிய விடயங்களையெல்லாம் ஒரு புத்தகமாக எழுதி 1932 ஆம் ஆண்டிலேயே வெளியிட்டார்கள். அதற்குப்பின்பு தான் மருத்துவ விஞ்ஞானத்துறையிலேயே ஒரு புதிய ஆராய்ச்சி ஆரம்பமாகியது.

அதற்கு "ஜியோ பாத்தாலஜி" என்று பெயர் வைத்தார்கள். பூமிக்கு அடியிலே உள்ள தீய கதிரியக்கம் சில நோய்களை உண்டாக்குகின்றது என்பதை பற்றிய ஆராய்ச்சி அது. பூமிக்கு அடியிலே இருக்கின்ற நீர்க்குழாய்கள், நீர்ப்பாதைகள், நீரோட்டங்கள் இவற்றிலெல்லாம் தீய கதிரியக்கங்களின் தாக்கம் இருக்கின்றது.

இதற்கும் பூமிக்கு மேலே அதற்கு நேராக இருக்கக்கூடிய மனிதர்களுக்கும் ஒரு தொடர்பு ஏற்படுகின்றது. அதனாலே அவர்களுடைய ஆரோக்கியம் கெட்டுப் போகின்றது. அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற்றம் ஏற்படுவதில்லை. இது தான் இந்த "ஜியோபாத்லஜி" என்ற மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சியின் அடிப்படை இப்பொழுதும் இது பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கின்றது. இதற்கென்று சில விசேடமான கருவிகள் தயார் செய்திருக்கின்றார்கள். பூமிக்கு அடியிலே இருக்கின்ற காந்தசக்தியின் ஏற்ற இறக்கங்களை அந்தக் கருவி அளந்து சொல்கின்றது.

வேறுவிதமாக சில சோதனைகளை செய்து பார்த்தார்கள். சில நோயாளிகள் படுத்திருந்த கட்டில்களை இடம் மாற்றிப் போட்டார்கள். பூமிக்கு அடியிலே தீய கதிரியக்கம் ,காந்த அதிர்வு அலைகள் , மின்சார ஓட்டம் இந்த மூன்றும் ஒன்றோடு ஒன்று மோதாத இடங்களிலே நோயாளிகளின் கட்டில்களைப் போட்டார்கள். அதற்குப் பிறகு பார்த்தீர்கள் என்றால் அவர்கள் எல்லாம் குணமடைந்துவிட்டார்களாம்.

புவி இயல் விஞ்ஞானிகள் மருத்துவ விஞ்ஞானிகளுக்கு இதை நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள். நம் ஊரிலே வீடு கட்டுவதற்கு மலையடி சாஸ்திரம் பார்க்கின்றார்களே அதற்கெல்லாம் ஏதாவது ஒரு அடிப்படைக் காரணம் இருக்கின்றது என்பதை பற்றி ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும் என்று எழுதியிருக்கின்றார் ஒரு பெரியவர். நமக்கு வேண்டிய ஒருத்தர் ஜியோ பாத்தாலஜி மனையடி சாஸ்திரம் எல்லாம் கவனித்து மிகவும் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்து ஒரு இடத்தை தெரிவு செய்தார். இது தான் வீடு கட்டுவதற்கு சரியான இடம் என்று. ஆனால் அவராலே வீடுகட்ட முடியவில்லையாம்.

ஏன் என்று கேட்டேன் "அந்த இடம் எனக்கு சொந்தமான இடமில்லை. அது வேற ஒருத்தருக்கு சொந்தம் .அதனாலே அவர் ஏற்கனவே அங்கே அஸ்திவாரம் பதித்துவிட்டார்" என்றார். ஏன்சேர்? அடுத்தவர்கள் இடத்திலே போய் வீடு கட்டுவதற்கு ஆராய்ச்சி செய்வது?

வெற்றியை ஊக்கமாகவும் தோல்வியை ஒரு பாடமாகவும் ஏற்க கற்றுக் கொள்ளுங்கள். மாறாக வெறி கொள்வதும் துவண்டு போவதும் செயல் திறனை குறைக்கும். *– சிட்னி ஸ்மித்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எழுதும் கடிதம்

அன்புக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு வணக்கம்.

யாழ்.பல்கலைக்கழகம் தமிழர்களின் பெரும் சொத்து. சைவப் பெருவள்ளல் சேர் பொன்.இராமநாதன் ஈந்தளித்த கொடை.

எனினும் இன்றைய யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம் சைவத்தின் அடையாளங்களை இழந்து நிற்கிறது.

யாழ்.பல்கலைக்கழக நுழைவாயிலில் இருந்த பெரிய நந்திச் சிலைகள் அடித்து உடைக்கப் பட்டன.

நந்திச் சிலைகளை உடைப்பதற்காகவே நுழைவாயிலை மாற்றியமைப்பது என்ற நய வஞ்சகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இப்போது நந்திச் சிலைகள் எலிக்குஞ்சு வடிவில் மிஞ்சிய சீமெந்துக் கலவையில் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் இருப்பும் எத்தனை நாட்கள் என்பது கூடத் தெரியவில்லை. இதற்கு மேலாக கிளிநொச்சி பொறியியல் பீடத்தில் புத்தர் பெருமான் குடியிருந்து விட்டார்.

ஆனால் சிவப்பரம்பொருளுக்கு இடம் ஒதுக்குவதில் இன்னமும் இழுபறி நிலை உள்ளதாம்.

இவ்வாறான விடயங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருப்பது மாணவர்களாகிய உங்களுக்குத் தெரியுமா என்பது கூட எமக்குத் தெரியவில்லை.

என்ன செய்வது கடந்த காலங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கிய சில மாணவர் அமைப்புகள் அரசியல் இலாபங்களை நுகரத் தலைப்பட்டதால் ஏற்பட்ட வாழ்மானம்தான் இவை.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நீங்கள் முன்னைய தவறுகளை இழைத்து விடக்கூடாது என்பதற்காகவே இக் கடிதத்தை எழுதுகின்றோம்.

தமிழ் அரசியல் என்பது எம் தமிழினத்துக்கு இதுவரை எதுவும் செய்யவில்லை.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் என்ற உயர் தகைமையுடனும் சமூகப் பெறுமானத்துடனும் இருக்கக் கூடிய நீங்கள் நின்று நிதானமாகச் சிந்திக்க வேண்டும்.

எங்களின் கடந்த கால அரசியல் என்பது துரோகம் மிக்கதாகவும் விலைபோனதாகவுமே இருந்துள்ளது.

காணாமல்போனவர்களின் உறவுகள் படும் அவலத்தைத் திரும்பிப் பாராதவர்கள், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய் என்று நிபந்தனை விதிக்கத் தெரியாதவர்கள், தங்களின் நலன்களைக் கவனிப்பதில் கருசனையாக இருந்தனர் என்பதை நாம் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

எனவே அன்பார்ந்த மாணவர்களே! எதிர் வரும் பொதுத் தேர்தலுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்து தமிழ் மாணவர்களும் ஏதோவொரு வகையில் கருத்துக்களை பகிர்ந்து சரியானதொரு முடிவை எடுங்கள்.

நீங்கள் எடுக்கின்ற இந்த முடிவு தமிழ் அரசியலுக்கு நல்லதொரு தலைமையை உருவாக்கட்டும். மிகப்பெரியதொரு அரசியல் மறுசீரமைப்பைத் தரட்டும்.

மாணவர்களாகிய நீங்கள் நினைத்தால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.

ஆகையால் இழந்து போன தமிழினத்தின் மீட்சிக்காக; நடுநிலை நின்று நேர்மைத் திறத்துடன் சிந்தனை செய்யுங்கள்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இதயங்களுக்கு நீங்களேனும் ஒத்தடம் கொடுங்கள்.

# யாழ்.மாவட்டத்தில் காசநோய் அதிகரிக்கிறது எச்சரிக்கிறார் மருத்துவர் யமுனாநந்தா

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் கொரோனா வைரஸ் அச்சம் படிப்படியாக குறைந்து வரும் நிலையில் காசநோய் பரவல் தொடர்பான அச்சம் அதிகரித்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இதுவரை 90பேர்அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மேலும் 20 நோயாளர்கள் அடையாளம் காணப்படாமல் சமூகத்துடன் இணைந்துள்ளார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் பரவல் என்பது இலங்கையில் குறைந்தளவே காணப்படுகின்றது. இருப்பினும் பல்வேறு நாடுகளில் இவ் வைரஸின் தாக்கம் பெரிதளவில் காணப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் 3 தொற்று நோய்கள் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக கொரோனா, காசநோய் மற்றும் எயிட்ஸ் நோய்களே இவ்வாறு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றன.

கொரோனா நோய் தொற்று அல்லது பரவல் தொடர்பில் பொது மக்களிடையே போதிய விழிப்புணர்வு உள்ளதால், அந்த நோய்ப்பரவலை சிறப்பான முறையில் கட்டுப்படுத்தக் கூடியவாறு உள்ளது.

ஆனால் கொரோனா அறிகுறி போன்று இருமல் உள்ளவர்களிடம் இருந்து காசநோயும் வேறு பலருக்கு பரவக்கூடிய அபாயம் உள்ளது. காசநோயும் கொரோனா போன்று மக்கள் விழிப்புணர்வுடன் இருந்து கட்டுப்படுத்த வேண்டிய ஒரு கொடிய நோயாகும்.

கடந்த 3 நூற்றாண்டு காலமாக உலகெங்கும் காச நோய்த்தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

2018 ஆம் ஆண்டு 1.2 மில்லியன் மக்கள் காச நோயால் உயிரிழந்துள்ளார்கள். மேலும் 1.1 மில்லியன் சிறுவர்கள் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உலகளாவிய ரீதியில் இந்த ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டுகளில் 10 மில்லியன் மக்கள் காச நோயால் பாதிக்கப்படுவார்கள். இதில் 3 மில்லியன் மக்கள் தாங்கள் காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளதை அறியாமலே அந்த நோயுடன் வாழ்வார்கள்.

மேலும் ஒரு மில்லியன் மக்கள் எதிர்வரும் ஒரு வருடத்தில் உயிரிழக்க வேண்டி நேரிடலாம்.

எனவே காசநோய் தொடர்பான விழிப்புணர்வும், அதற்கான சிகிச்சையும் மிகவும் இன்றியமையாதது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இவ்வருடத்தில் இன்று வரை 90 காச நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். மேலும் 20 காச நோயாளர்கள் இன்னும் இனங்காணப்படாமல் சமூகத்தில் உள்ளார்கள்.

கொரோனா வைரஸ் தொற்று பரவலால் மேற்கொள்ளப்பட்டுவரும் சிறப்பு நடவடிக்கைகள் காரணமாக காசநோயாளர்களை இனங்காணப்படுவதில் தடை ஏற்பட்டுள்ளது.

கொரோனாவால் ஏற்படுத்தப்படும் வறுமையும் காசநோய் பெருக்கத்தை ஏற்படுத்தும்.

இருவாரமாக தொடர் இருமல், மாலை வேளைகளில் காய்ச்சல், நெஞ்சு நோ, உடல்மெலிவு, உணவில் விருப்புமின்மை, சளியுடன் குருதி வெளியேறுதல் போன்ற அறிகுறியுளளவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று சளிப்பரிசோதனை செய்ய வேண்டும்.

காசநோய்க்குள்ளான ஒருவருக்கு 6 மாத தொடர் சிகிச்சை மூலமாக அவரை முழுமையாக குணப்படுத்திக் கொள்ளலாம். எனவே இதைக்கண்டு அஞ்சத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 16 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** கொழும்புத்துறை வீதி, AV வீதி, துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், ஹெலன் தோட்டம், உதயபுரம், Infantas Ice Solutions பிறைவேற் லிமிற்ரெட் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பொன்னாவெளி, பாலாவி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் ஒரு பகுதி, துட்டுவாகை ஒரு பகுதி, பகல அளுத்வத்த கிராமம், பத்தினியார் மகிழங்குளம் கிராமம், தவசிகுளம் கிராமம், கிறிஸ தவகுளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** ஓலைத்தொடுவாய், முள்ளிப்பழம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம, டயலொக்தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**நெருப்பு வெளிச்சத்தையும் கொடுக்கிறது; வெப்பத்தையும் கொடுக்கிறது; வெளிச்சத்தில் பார்கக முடிகிறது என்பது உண்மைதான். ஆனால வெப்பத்தின் கொடுமையில் உடனே வெந்து விடுகிறது. செயல்களில் ஈடுபடும் போது வெறும் ஆனந்தம்தான் கிடைக்கிறது என்றில்லை. துன்பமும் இருக்கிறது. இரண்டையும் ஏற்கும் மனப்பக்குவம் வேண்டும். -ஸ்ரீ ராமகிருஷ்ணர்**

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## முன்பின் பிறவிகள்



ஒரு மனிதனின் முற்பிறவிகளை அறிய வேண்டுமானால், அவன் உருவத்திற்கு மூலமான விந்துநாதத் தொடர்பை யூகத்தால் பற்றிக் கொண்டே பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

அந்தத் தொடர்பு பல்லாயிரக்கணக்கான உருவ வேறுபாடுகளையுடைய ஜீவராசிகளாகக் காட்சியளிக்கும். அத்தனை ஜீவராசிகளின், உடலியக்கம், அறிவியக்கம் இவைகளை அடக்கமாகப் பெற்றவனே ஒவ்வொரு மனிதனும்.

பின்னோக்கிச் செல்லும் உருவப் பரிணாமத் தொடர்பு, பல ஜீவராசிகளையும் தாண்டிப்போய் இறுதியாகப் பரமாணுவிலேயே முடிவு பெறும். அங்கிருந்து முன்னோக்கிப் பார்த்தால், எல்லா ஜீவராசிகளும், தோற்றப் பொருட்களும், ஒரே மூலத்தை அடிப்படையாகக் கொண்டு விரிந்து, பிரிந்து தொடர்ந்து இயங்கும் ஒரு அகண்ட பேரியக்கம் அறிவுக்குக் காட்சியாகும்

ஒரு மனிதனின் பின்பிறவிகளை அறிய வேண்டுமானால், அவை அவன் விந்துவின் மூலம் தோன்றும் மக்களும் அம்மக்களின் மூலம் தொடர்ந்து தோன்றும் மக்களுமேயாவர்.

ஆதி அல்லது அகண்ட சக்தி, அணு, அறிவு என்ற மூன்று நிலைகளைப் பற்றி அறிந்தவர்களுக்கு இந்த விளக்கம் மிகத் தெளிவாக இருக்கும். மற்றவர்கள் பொறுமையோடு பலதடவை சிந்தித்தே அறிய வேண்டும்.

# எரிபொருள் தாங்கி வெடித்து சிதறியதில் 19 பேர் உயிரிழப்பு; 172 பேர் படுகாயம்

(பீஜிங்)

**சீனாவில் எரிபொருள் தாங்கி ஒன்று வெடித்து சிதறியதில் 19 பேர் உயிரிழந்ததுடன் 172 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**



சீனாவின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள ஜேஜியாங் மாகாணத்தின் வென்லிங் என்ற நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது.

வீதியில் சென்று கொண்டிருந்த எரிபொருள் தாங்கி வெடித்ததில் அருகிலிருந்த வீடுகள், தொழிற்சாலைகள் சேதமடைந்ததுடன் பாரிய தீ பரவி பல வாகனங்களும் தீக்கிரையாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த 172 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் விபத்துக்கான காரணம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5)

## ஜோர்ஜ் ஃபிலாய்டின் மரணத்தின் எதிரொலி பிரான்ஸில் ஆர்ப்பாட்டக்காரர்கள்- பொலிஸார் மோதல்

(பாரிஸ்)

கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ஃபிலாய்டின் மரணத்தைத் தொடர்ந்து மத்திய பாரிஸில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற போராட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

சுமார் மூன்று மணிநேர அமைதியான போராட்டத்தினை அடுத்து போராட்டம் மோதலாக மாறியமையால் போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த கண்ணீர்ப்புகை பிரயோகத்தைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் குப்பைகளை எரித்து கலக எதிர்ப்பு பொலிஸாரை நோக்கி கற்களை வீசினர். கடந்த மாதம் மினியா பொலிஸில் இடம்பெற்ற ஜோர்ஜ் ஃபிலாய்டின் மரணத்தால் உருவான சீற்றம் பிரான்ஸில் எதிரொலித்தது. (2-5)

## மீண்டும் கறுப்பினத்தவர் சுட்டுக்கொலை அமெரிக்காவில் போராட்டம்




(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கறுப்பினத்தைச் சேர்ந்த மற்றுமொருவர் அட்லான்டா பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார். இந்நிலையில், அட்லான்டா பொலிஸ் தலைமை அதிகாரி எரிகா ஷீல்ட்ஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அந்நாட்டில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ஃபிலாய்ட் பொலிஸ் காவலில் வைத்து கொல்லப்பட்டதையடுத்து எழுந்த போராட்டங்கள் அடங்காத நிலையில் மேலும் ஒரு கறுப்பினத்தைச் சேர்ந்தவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டமை பதற்றத்தை அதிகப்படுத்தியுள்ளது.

இந்த துப்பாக்கிச்சூடு கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றதுடன் இதில், ரேய்ஷார்ட் ப்ரூக்ஸ் (27 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார். அதனைத் தொடர்ந்து அங்கு போராட்டங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன.

அவர், பொலிஸாரிடமிருந்து துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஓடியதாகவும் இதனையடுத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து, அட்லான்டாவில் ப்ரூக்ஸ் சுடப்பட்ட இடத்தில் உள்ள உணவு விடுதியை போராட்டக்காரர்கள் தீவைத்துக் கொளுத்தியதுடன் வீதிப் போக்குவரத்தையும் முடக்கினர்.

உணவு விடுதியொன்றில் கார்கள் நிறுத்துமிடத்தில் ப்ரூக்ஸ் காரிலேயே தூங்கியுள்ளார். இதனையடுத்து ஏனைய வாடிக்கையாளர்கள் வருகையை அவர் தடுப்பதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதையடுத்து, இவரைப் பொலிஸார் கைதுசெய்ய முயற்சித்த போது பொலிஸாருடன் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதில் அதிகாரி ஒருவரின் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு அந்த இடத்திலிருந்து ப்ரூக்ஸ் ஓடியுள்ளார்.

பின்னர், பொலிஸ் அதிகாரிகள் அவரைத் துரத்தியுள்ளனர், ஆனால் அவர் துப்பாக்கியை பொலிஸாரை நோக்கிக் காட்டி அச்சுறுத்தியுள்ளார். இதனையடுத்து பொலிஸார் அவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். இந்நிலையில் இவரது கொலை இன்னுமொரு பெரிய போராட்டத்தை அமெரிக்காவில் உருவாக்கியுள்ளது. (2-5)

## கொரோனா புதிய தொற்றாளர்கள்; பீஜிங்கில் மீண்டும் ஊரடங்கு



(பீஜிங்)

சீனாவில் கடந்த சில நாட்களாக மீண்டும் கொரோனா தொற்று பரவத்தொடங்கியுள்ளது. இந்நிலையில், தலைநகர் பீஜிங்கில் 2 பேர் உட்பட அந்த நாட்டில் புதிதாக 10 பேருக்கு தொற்று நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டது. முடிவுக்கு வந்துவிட்டது கொரோனா என கருதப்பட்டு வந்த நிலையில், புதிதாக 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பது அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

56 நாட்களுக்கு பிறகு, தலைநகர் பீஜிங்கில் கடந்த வெள்ளிக்கிழமை ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. அதன் பின் பீஜிங்கில் நேற்று முன்தினம் மேலும் 2 பேருக்கு தொற்று உறுதியானது. இதனால், இயல்பு நிலைக்கு திரும்பிக்கொண்டிருந்த பீஜிங்கில் அதிகாரிகள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பீஜிங்கில் புதிதாக நேற்று தொற்று உறுதி செய்யப்பட்ட 2 பேர் பெங்டாய் மாவட்டத்தில் உள்ள சீன இறைச்சி உணவு ஆராய்ச்சி மையத்தின் ஊழியர்கள் ஆவார்கள்.

உணவுச் சந்தையில் உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள் கடல் உணவு சந்தையையும் மூடி, பீஜிங்கின் மொத்த உணவு சந்தைகள் அனைத்திற்கும் உணவு மற்றும் சுற்றுச்சூழல் மாதிரிகளை சோதிக்க உத்தரவிட்டனர். கொரோனா வைரஸ் பாதிப்புகள் பதிவாகிய பின்னர் பீஜிங்கில் சில பகுதிகளுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. (2-5)

## வரலாற்று சிறப்பு வாய்ந்த அருங்காட்சியகம் மீண்டும் திறப்பு


(பாரிஸ்)

பிரான்ஸில் அமைந்துள்ள உலகின் மிகப்பெரிய அருங்காட்சியமான லூவர் (Louvre) அருங்காட்சியகம், எதிர்வரும் ஜூலை மாதம் 6ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

கடுமையான சுகாதாரக் கட்டுப்பாட்டுடனும், பாதுகாப்பு இடைவெளிகளுடனும் இந்த அருங்காட்சியகம் இயங்க உள்ளது.

வரலாற்றுக்கு முந்திய காலம் முதல் 19ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியைச் சேர்ந்த ஏறத்தாழ 35,000 அரும்பொருட்கள், 60,600 சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட இடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

14ஆம் லூயியுடைய அரண்மனைதான் தற்போது இந்த அருங்காட்சியகமாக உள்ளது.



பரந்து விரிந்த உயர்ந்த இவ்வருங்காட்சியகம் வெளிப்புறத்தில் எவ்வித மாற்றமுமின்றி அதே பழைய கட்டடக் கலை நுட்பத்துடன் பேணப்படுகிறது.

புகழ் பெற்ற ஓவியர் இலியானார்டோ டாவின்சியின் ஓவியமான மோனாலிசாவின் ஓவியம் இந்த அருங்காட்சியகத்தில்தான் உள்ளது. (2-5)

## ஹெரோயினுடன்...

யில் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி மகாத்மா வீதியில் உள்ள வீடொன்றில் ஹெரோயின் போதைப் பொருள் இருப்பதாக காங்கேசன்துறை மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் சோதனை நடவடிக்கை யில் ஈடுபட்டனர்.

இதன்போது வீட்டிலிருந்த 36 வயது இளைஞன் ஒருவரின் உடைமையில் இருந்து 23 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. வீட்டிலிருந்த கரணவாய் மத்தி, நவிண்டிலைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவரின் உடைமையில் இருந்து 21 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட ஹெரோயினும் சந்தேகநபர்களும் நெல்லியடிப் பொலிஸாரிடம் பாரப்படுத் தப்பட்டுள்ளனர். (ம-3,60)

## வெடிபொருட்கள்...

ஒன்றை நீண்ட காலத்தின் பின்னர் வீட்டின் உரிமையாளர் நேற்று துப்புரவு செய்துள் ளார்.

இதன்போது குறித்த கிணற்றில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பதை அவதானித்து ஓமந்தைப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இரண்டு ஆர்பிஜி ரக ஷெல்லினையும் ஒரு மோட்டார் ஷெல்லினையும் மீட்டனர்.

மீட்கப்பட்ட வெடிபொருட்கள் இன்றைய தினம் செயலிழக்கச் செய்யப்படவுள்ளன. (ம-3,299)

## வாக்கெடுப்பு...

அவ்வாறு வாக்கெடுப்பு இரத்துச் செய்யப்படும் பிரதேசத்தில் மீள் வாக்கெடுப்பு நடத்தப்படும். இதனால் தேர்தல் பெறுபேறு வெளியாகுவதில் தாமதம் ஏற்படுமென ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

சமூக ரீதியில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் இல்லையென சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் சில வேளைகளில் வைரஸ் பரவலானது திடீரென ஏற்படுமிடத்து, மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்று நடவடிக்கை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தயார் நிலையில் உள்ளது.

இதேவேளை, இம்முறை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பதாகைகள், கட்டவுட்கள், சுவரொட்டிகளை பயன்படுத்த முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடையை மீறிப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டால், அவற்றை அகற்றும் உரிமை மாகாண ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் பிரசாரங்களுக்கென ஐம்பது பேரை மட்டுப்படுத்தி சிறிய கூட்டங்களை அதிகளவில் நடத்த முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.(ம-3)

## விடத்தல்பளை...

தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியிருந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியிருந்த தொற்று உறுதி செய்யப்பட்டவருடன் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக பிரிவுக்குட்பட்ட 11 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த 4 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட 3 பேர், வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3,18)

## பெண் உட்பட...

நிற்குள் உள்நுழைந்த சிலர் அங்கிருந்தவர்களை வாளால் வெட்டியதுடன், வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களையும் தாக்கி சேதப்படுத்தி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் பெண் உட்பட ஐந்து பேர படுகாயமடைந்த நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் இருவரை கைது செய்துள்ளதாக தெரிவித்தனர். (ம-3,299)

## தமிழ் மக்களு...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமஷ்டியாட்சியின் கொள்கைகளை உள்ளடக்காத வகையிலும், எத்தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலும் அரசியலமைப்பு திருத்தம் செய்யப்படும்.

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு அரசியல் நோக்கங்களை பின்னணியாக கொண்டிராத வகையில் வழங்கப்படும்.

பொருளாதாரத்தை மேம்படுத்தினால் இனங்களுக்கிடையில் எவ்வித முரண்பாடும் தோற்றம் பெறாது என்பதே அரசாங்கத்தின் கொள்கை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வந்தால் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தங்களின் தனிப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தின் இருப்பினை தீர்மானிக்கும் ஒரு பலமான சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி பதவி வகித்தது.

எதிர்கட்சி பதவியில் இருந்து கொண்டு கூட்டமைப்பினர் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

நாட்டை பிளவுபடுத்தும் வகையில் சமஷ்டியாட்சியின் கொள்கைகளை உள்ளடக்கிய அரசியலமைப்பினை உருவாக்குவதில் தொடர்ந்து கவனம் செலுத்தினார்கள். மறுபுறம் ஐக்கிய தேசிய கட்சியின் பங்காளிக் கட்சியாகவும் செயற்பட்டார்கள்.

பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு பிரதேச தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதற்கு நல்லாட்சி அரசாங்கத்தில் எதிர்த் தரப்பினராக செயற்பட்ட நாங்கள் ஒருபோதும் தடைகளை ஏற்படுத்தவில்லை.

அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணபதாக குறிப்பிட்டுக் கொண்டு நாட்டை பிளவுபடுத்தும் செயற்பாடுகளுக்கே கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்தினோம்.

தமிழ் , முஸ்லிம் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியது அவசியம். அது அரசாங்கத்தினதும் பொறுப்பாகும். அரசியலமைப்பில் திருத்தம் ஊடாகத்தான் தீர்வு காண முடியும் என்பது பொருத்தமற்றது.

அரசியலமைப்பின் ஊடாக ஒரு தரப்பினருக்கு தீர்வு வழங்கும்போது பிறிதொரு தரப்பினர் பாதிக்கப்படுவார்கள். இதனைக் கூட்டமைப்பினர் புரிந்து கொள்ள வேண்டும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றப்பட வேண்டும். பொருளாதார சமத்துவம் காணப்படும்போது இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறாது.

சமஷ்டியாட்சியின் கொள்கைகளை உள்ளடக்காத விதத்தில் நிச்சயம் தமிழ் மக் களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும் என்றார். (ம-3)

## வடக்கை இலக்கு...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நியமித்த விசேட ஜனாதிபதி செயலணி கிழக்கின் தொல்பொருள் பிரதேசங்களை முற்றுமுழுதாக கண்காணித்து அவற்றை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும் என ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில் கடந்த செயலணிக் கூட்டத்தில் அதனை உறுதிப்படுத்தும் விதத்தில் செயலணியிடமே சகல அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் தற்போது செயலணியின் பார்வை வடக்கு நோக்கி திரும்பியுள்ளது.

வடக்கில் நாக விகாரை மற்றும் சில பகுதிகளிலும் தொல்பொருள் பிரதேசங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் ஆகவே அநுராதபுரம் தூபாராம விகாரை தொடக்கம் நாக விகாரை வரையில் சகல பகுதிகளையும் பாதுகாத்து நாட்டின் பாரம்பரியத்தை தக்கவைக்க வேண்டும் எனவும் செயலணியில் அங்கம் வகிக்கும் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார். (ம-3)

## கடலட்டை பிடிப்...

ராட்சி பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் வடமராட்சி கிழக்கு உட்பட்ட 15 சங்கங்களையும் பிரதேச கிராம மட்ட அமைப்புகள் சமூக ஆர்வலர்கள், மீனவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அழைப்பு விடுத்துள்ளது. (ம-3,60)

## வடம...


விக்கப்படுகிறது.

குறித்த தாக்குதல் சம்பவம் யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, குடத்தனை கிழக்கு குலான் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இரண்டு குழுக்களுக் கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்திலேயே குறித்தமூவரும்காய மடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமாமி அடைந்த மூவரில் இருவரின் நிலை ஆபத்தாகக் காணப்படுவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3)

# ரீல் தோனி விபரீத முடிவு



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் தோனியின் வாழ்க்கை வரலாற்று படமான "M.S. Dhoni: The Untold Story" படத்தில் நடித்திருந்த பாலிவுட் நடிகர் சுஷாந்த் சிங் ராஜ்புட் நேற்று தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

அவருக்கு வயது 34. மும்பை பாந்த்ரா பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் சுஷாந்த் சிங் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். (ம-3)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 14-06-2020 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2448 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 15 34 66 74 |

தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2020/06/14 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4154 |
| ஆங்கில எழுத்து | D |
| வெல்லப்பட்ட இலக்கங்கள் | 0 7 7 4 7 6 |

தேசிய லொத்தர் சபை

மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 14/06/2020 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0523 |
| வெற்றி எழுத்து | I |
| சுப்பர் இலக்க | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 28 38 39 60 |

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1148/1158

வர்ணம் சிவப்பு 14.06.2020 ஞாயிற்றுக்கிழமை

U 05 18 25 62

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,615,384/-

கொவிசெத சம்பத

B 24 65 68 79

சீட்டிழுப்பு வாரம் 575/585 திகதி 14.06.2020 வர்ணம் மஞ்சள்

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,003,195/-

ராசி அதிர்ஷ்டம் உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| வெற்றி வாரங்கள் | 2806 | 2831 |
| வர்ணம் | ஊதா | |
| திகதி | 14.06.2020 | |

கொவிட்-19 தொற்று நோய் காரணமாக 22.03.2020 இல் தடைப்பட்டிருந்த "ராசி அதிர்ஷ்டம்" லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.

வெற்றி இலக்கங்கள் 18 31 36 44 ராசி கன்னி

ரூ.500 பரிசுக்குரிய 4764

ரூ.100 பரிசுக்குரிய 785

விசேட இல.

எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 23,68,674/=

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

தொ. பே. : 0112 333 546/47 Web: www.dlb.lk

# மக்கள் ஒன்று கூட வாய்ப்பளிக்கப்பட்டால் பாரதூரமான நெருக்கடியை ஏற்படுத்தும்

## ஜனாதிபதியிடம் சுகாதாரத்துறை சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மிக விரைவாகப் பரவக் கூடிய வைரஸ் தொற்று நிலைமைக்கு மத்தியில் மக்கள் ஒன்று கூடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டால் அது சுகாதாரத்துறைக்கு பாரதூரமான நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதையும் சுகாதாரத் துறையினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டியுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

பெரஹராக்களை எவ்வாறு நடத்துவது என்பது பற்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் தொடர்பில் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பெரஹராக்களை எவ்வாறு நடத்துவது என்பது பற்றி விசேட கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

இதன் போது தலதா மாளிகை மற்றும் கதிர்காமத்தில் ஏற்பாடு செய்யப்படும் பெரஹெராக்கள் பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதன் போது பாரியளவில் பெரஹெராக்கள் ஏற்பாடு செய்யப்பட்டாலும் மக்கள் ஒன்று கூடுவதற்கு இடமளிக்கப்படக் கூடாது என்று சுகாதாரத்துறையினர் உறுதியாகக் கூறினர்.

இது மக்களின் சுகாதார பாதுகாப்பில் பெரும் பங்கு வகிக்கும் காரணியாகும். எதிர்பாராத விதமாக கோவிட்-19 தொற்றுக்குள்ளான ஒருவர் இவற்றில் கலந்து கொண்டால் கூட நாட்டில் பெருமளவான மக்களுக்கு அது பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்பதையும் சுகாதாரத்துறையினர் சுட்டிக்காட்டினர்.

மிக விரைவில் பரவக் கூடிய இந்த வைரஸ் தொற்று நிலைமைக்கு மத்தியில் மக்கள் ஒன்று கூடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டால் அது சுகாதாரத்துறைக்கு பாரதூரமான நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதையும் சுகாதாரத்துறை சுட்டிக்காட்டியது.

அதற்கமைய இந்த கலந்துரையாடலில் மத பேரணிகள் அல்லது பெரஹெராக்களில் இடம்பெறும் மத வழிபாடுகள் நிச்சயமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

எனினும் இவற்றுக்கு மக்களுக்கு அனுமதியளிக்கப்படக் கூடாது என்றும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என்றார். (ம-3)

## வாள்வெட்டுடன் தொடர்புடைய 7 பேர் நாவற்குழியில் கைது

(கொடிகாமம்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி பகுதியில் வைத்து வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் நாவற்குழிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பல்வேறு வாள்வெட்டுச் சம்பவங்களுடன்தொடர்புடைய 7 பேரை நேற்று சுற்றிவளைப்பில் ஈடுபட்டு சாவகச்சேரி பொலிஸார்கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 7 பேரையும் இன்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3,114)

## வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணிகள் 50 வீதம் நிறைவு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் 50 வீதம் நிறைவடைந்துள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகள், அச்சிடப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகள் எதிர்வரும் நாட்களில் அச்சிடப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இம்முறை பொதுத் தேர்தலுக்காக ஒரு கோடியே 70 இலட்சம் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படவுள்ளன.

இவ்வாறு அச்சிடப்படவுள்ள வாக்குச் சீட்டுகளில் மிகவும் நீளமான வாக்குச்சீட்டு கம்பஹா மாவட்டத்திற்காக அச்சிடப்படவுள்ளது.

நீளமான வாக்குச்சீட்டு யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹாக்கும் அகலமான வாக்குச் சீட்டு கொழும்பு, வன்னி, திகாமடுல்லை மற்றும் மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களுக்கும் அச்சிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பதாகைகள், சுவரொட்டிகள் அகற்றும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய சட்ட விரோத பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் ஆகியவற்றை அகற்றும் நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் இந்த நடவடிக்கை நடைபெறவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நியாயமானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடாத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் குறித்த நடவடிக்கையை கண்காணிப்பதற்கு, அனைத்து பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கும் பதில் பொலிஸ்மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் ஜாலிய சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வவுனியா புகையிரத நிலையத்தில்

# குழப்பம் விளைவித்த இருவர் பொலிஸாரால் கைது

(வவுனியா)

வவுனியா புகையிரத நிலையத்தில் குழப்பம் விளைவித்தார்கள் என்ற சந்தேகத்தில் இருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா புகையிரத நிலையத்திற்கு நேற்று மாலை வருகை தந்த இருவர் நிலைய அதிபருடன் தகாத வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்தி தகராறில் ஈடுபட்டதாகவும் இதேவேளை குறித்த இருவரும் தகராறில் ஈடுபட்டதோடு புகையிரத நிலைய அதிபருக்கு அச்சுறுத்தலும் விடுத்து அங்கிருந்து சென்றுள்ளனர் எனவும் புகையிரத நிலைய உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக புகையிரத நிலைய தலைமையகத்திற்கு அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் தகராறில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படும் வரை புகையிரத சேவைகளை நிறுத்துவோம் எனவும் தெரிவித்தமையால் தகராறில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களை இன்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் புகையிரத நிலைய உத்தியோகத்தர்களுக்கு தெரிவித்துள்ளனர். (ம-3,299)

யப்பான் சைக்கிள்
விலை 12000/= லிருந்து

1.லேடீஸ் சைக்கிள்கள்
2.யென்ஸ் சைக்கிள்கள்
3.கியர் சைக்கிள்கள்
4.மடக்கும் சைக்கிள்கள்
5.பாரம் எற்றும் சைக்கிள்கள்
6.LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
இலகுவான ஓட்டம் பாட்ஸ் தாராளமாக உண்டு கழுவியூட்டுதல், திருத்த வேலைகள் இல்லை
நீண்டகாலப் பாவனை
யப்பான் சைக்கிள் B பசார்
மருதனார்மடம் றோட், உரும்பிராய் மேற்கு.
(மருதனார்மடம் சந்தியிலிருந்து 1 KM)
(C-9703)

மீண்டும்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-9685)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

விஷ்ணு பவன்
உயர்தர சைவ உணவகம்
No.350, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
15.06.2020 திங்கள் இன்று முதல்
இலைக்கஞ்சி - காலை 7.00 மணி - மதியம் 12.00 மணிவரை
ஒடியல் கூழ் - காலை 10.00 மணி - மாலை 3.00 மணிவரை
பெற்றுக்கொள்ளலாம்.
(3021)

புலமைப்பரிசில் வகுப்புக்கள்
தரம் 4 மற்றும் தரம் 5க்கான தனிப்பட்ட வகுப்புக்கள் பாடசாலை ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். 077 028 9888
(3020)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-9624)
0768226240

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(3022)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# வடக்கு மாகாண கல்வித் திணைக்களமும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை

## க.பொ.த.சாதாரணதரம் - வரலாறு

நேரம்: ஒரு மணித்தியாலம்

வினாப்பத்திரம் - 01

கவனிக்க.

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

01) சித்தாறும்பி புத்தநாயக்க என்னும் அதிகாரிக்கு நன்றிக்கடனாக வழங்கப்பட்ட பரிசுகளும் சலுகைகளும் பற்றிக் குறிப்பிடும் வரலாற்றுச் சாசனம்

1) ரஜகல கல்வெட்டு 2) வல்லிபுர பொற்சாசனம்
3) சீகிரியா கிறுக்கல் கவிதைகள் 4) பனாகடுவ செப்புச் சாசனம்

02) கம்பளை முதல் கோட்டை வரையிலான காலப்பகுதியின் வரலாற்றைக் கற்க உதவும் நிக்காய சங்கிரஹய மற்றும் ராஜாவலிய ஆகிய நூல்கள் மூலம் அறியப்படும் தகவல்கள்

1) அரசியல், வர்த்தகம் 2) பௌத்த சாசனம், வர்த்தகம்
3) பௌத்த சாசனம், அரசியல் 4) அரசியல், பௌத்த சாசனம்

03) "பதிராஜவெல" எனப்படும் கற்கால வசிப்பிடம் பின்வரும் எந்த வசிப்பிட வகைக்குரியதாகும்

1) தாழ்நில ஈரவலயக் குகை 2) கரையோர திறந்த வெளிகள்
3) தாழ்நில உலர் வலயக் குகை 4) ஈரவலய திறந்தவெளிப் பாசறை

04) ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் சிறு குளங்களின் பராமரிப்புக்குப் பொறுப்பாகச் செயற்பட்டவர்

1) பருமக 2) கமிக
3) கிருகபதி 4) கஹபதி

05) திஸ்ஸ மகாராம குளத்தைக் கட்டிய மன்னன் யார்?

1) அபயநாகன் 2) வசபன்
3) தேவநம்பியதிஸ்ஸ 4) இளநாகன்

06) கி.மு 250 ஆம் ஆண்டை அண்மிய காலக் கல்வெட்டுக்களில் இல்லத் தலைவர்கள் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டனர்

1) கமிக 2) கிருகபதி 3) குர்ஹபதி 4) கஹபதி

- கீழே தரப்பட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு 7 ஆம் 8 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A) அரச வரி அறவீடு முறைப்படுத்தப்பட்டமை
B) யுத்த நடவடிக்கை மூலம் சோழர்களை தோல்வியடையச் செய்தமை
C) பன்முகப்படுத்தப்பட்டிருந்த இலங்கையின் அரசியல் அதிகாரத்தை மத்தியமயப்படுத்தியமை
D) புனித வெள்ளரசு மரக்கிளை நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டமை

07) மேற்கூறிய வரலாற்றுத் தகவல்களில் முதலாம் விஜயபாகு மன்னனுடன் தொடர்புடையது?

1) A 2) B 3) C 4) D

08) மேற்கூறிய வரலாற்றுத் தகவல்களில் தேவநம்பியதிஸ்ஸ மன்னனுடன் தொடர்புடையது?

1) A 2) B 3) C 4) D

09) கி.பி 8 ஆம் 9 ஆம் நூற்றாண்டுகளில் இந்நாட்டு ஆட்சியாளர்கள் சீனாவுடன் நெருங்கிய உறவுகளை மேற்கொண்டதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணி

1) சமய நடவடிக்கை 2) திருமணத் தொடர்புகள்
3) வர்த்தகத் தொடர்புகள் 4) படை உதவி பெறல்

- நிரல் I. நிரல் II ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 10 ஆம் 11 ஆம் வினாக்களுக்கு விடை தருக

| நிரல் I | நிரல் II |
|---|---|
| A. "நவதெளி சேன" | 1 "புத்சரண" |
| B. "சேன" | 2. கல்வெட்டுக்கள் |
| C. "செ ஹென்" | 3. சத்தர்மரத்னாவலிய |
| D. "பிடபிம்" | 4. சிங்கள உம்மக்க ஜாதக |

10) சேனைப் பயிர்ச்செய்கை தொடர்பாக புதிதாக தீயிடப்பட்ட காணி A எனும் சொற்பதத்தால் குறிபிடப்படுகின்றது. இச் சொற் பதம் நிரல் II இல் காணப்படும் வரல்ாற்று மூலாதாரம்

1) 1 2) 2 3) 3 4) 4

11) நிரல் II இல் 1 என்ற வரலாற்று ஆதாரத்துடன் தொடர்புபடும் சொற்பதம் நிரல் I இல் யாது?

1) D 2) C 3) B 4) A

12) சூரிய ஒளியில் இருந்து பாதுகாக்கப்பட்ட மண்டபம் ஒன்றின் கீழ் மட்டுமே வெற்றிலை வியாபாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். இச்சட்டமூலம் பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டு மூலாதாரம்

1) கலபொத்த கல்வெட்டு 2) மிகிந்தலை தூண் கல்வெட்டு
3) சொரபொர வாவித் தூண் கல்வெட்டு 4) கொண்ட வட்ட வான் தூண் கல்வெட்டு

13) புராதன காலத்தில் இந்நாட்டில் வாழ்ந்த கவிஞர்களின் கவிதைகளில் கருப்பொருளாகக் கையாளப்பட்ட பிரதானமான விடயம்.

1) அழகியல் உணர்வு 2) உலகின் நிலையாமை
3) சமூக வாழ்க்கை 4) இன நல்லிணக்கம்

14) குளத்தில் சேரும் சேற்றை வெளியேற்றல் மற்றும் குளத்து நீரைக் கால்வாய்க்கு திறந்து விடுதல் ஆகிய இரு செயற்பாடுகளுடனும் தொடர்புடைய குளத்தின் தொழில்நுட்பக் கூறு

1) கலிங்கல் 2) அலைதாங்கி 3) சுருங்கை 4) மடைக்கதவு

15) பண்டைய காலத்தில் நில அளவீட்டில் பயன்படுத்தப்பட்ட இரு அளவை முறைகளைக் குறிப்பிடும் விடைத்தொகுதி

1) பேல்ல, கரீசை 2) கவ்வ, யொதுன 3) அக்க, தரண 4) மொஹத்த, தீதிய

16) "பராபவ" என்ற சிங்கள நாடகத்தின் மூலம் மது பாவனையின் தீமைகளை மக்களுக்கு வெளிப்படுத்திய பௌத்த மறுமலர்ச்சியாளர் யார்?

1) அநாகரிக தர்மபால 2) ஜோன் த சில்வா
3) பியதாஸ சிரிசேன 4) வலிசிங்க ஹரிச்சந்திர

17) புராதன கால இலங்கையில் நீர் முகாமைத்துவம் தொடர்பான பொருத்தமற்ற விடை எது?

1) கலாவாவியில் இருந்து திஸ்ஸவாவிக்கு நீரைக்கொண்டு செல்ல யோத கால்வாய் பயன்பட்டது
2) எலஹரக் கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் பெற்ற குளங்களில் பதவியா வாவியும் ஒன்றாகும்
3) மினிப்பே அணை முதலாம் அக்ரபோதி மன்னனால் அமைக்கப்பட்டது
4) அநுராதபுரம் ரன்மசுப் பூங்காவுக்கு திஸ்ஸ வாவியில் இருந்து சுரங்க வழி நீர்ப்பாசனம் செய்யப்பட்டது

18) சந்திரபானு என்னும் ஜாவா நாட்டு ஆக்கிரமிப்பாளனின் ஆக்கிரமிப்பு இலங்கையில் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் ஆட்சிக் காலம்

1) யாப்பகூவ 2) கம்பளை 3) குருநாகல் 4) தம்பதெனியா

- கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் I வரையிலான வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 19 ஆம் 20 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| கல்வெட்டுக்கள் | பொறிக்கப்பட்ட வரலாற்று விடயங்கள் | பொறித்த மன்னன் |
|---|---|---|
| A. தம்புள்ள விகாரைக் கல்வெட்டு | D. குளங்களில் இருந்து நீர் பெறும் வயல்களில் நெல் தவிர பாசிப்பயறு விதைத்தல் ஆகாது | G. முதலாம் கஜபாகு |
| B. சித்துல்பவ்வ கல்வெட்டு | E. அரசன் குடிமக்களுக்கு தெய்வமாக விளங்கவேண்டும் | H. நான்காம் மகிந்த |
| C. வெஸ்ஸகிரி கல்வெட்டு | F. நீதி தொடர்பான தண்டனைகள் | I. குட்ட கண்ண அபய |

19) விவசாயத்தை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு ஆட்சியாளர்கள் பிறப்பித்த சட்டம் தொடர்பான விடைத்தொகுதி

1) C,D,H 2) A,E,I 3) B,F,G 4) C,D,I

20) நீதியை பாதுகாப்பது தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் தொடர்பான விடைத் தொகுதி

1) C,F,G 2) B,F,G 3) A,F,G 4) C,E,I

21) இலங்கையில் பண்டைய காலத்தில் பெண்கள் தமது செல்வத்தைக் கொண்டு சமயப் பணிகளை மேற்கொள்வதற்கு சுதந்திரம் இருந்தது என்பதற்கு ஆதாரமாகக் குறிப் பிடப்படுபவர் யார்?

1) தலுதா லஷ்மி 2) அசோகமாலா 3) சுமனா 4) லீலாவதி

22) கண்டி இராச்சியத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் வரி ஒழுங்கமைப்பில் படஹெலபத்த எனக் குறிப்பிடப்படும் அமைப்புக்கு வழங்கப்பட்டிருந்த செயற்பாடு

1) போக்குவரத்து 2) நெசவு 3) வனைதல் 4) யானை பிடித்தல்

23) கண்டி இராச்சிய நிர்வாகக் கட்டமைப்பில் மன்னனுக்கு அடுத்தபடியாக அரசில் அந்தஸ்துப் பெற்றிருந்த பிரதம பிரதானி எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்

1) பல்லேகம்மா 2) கடுபுள்ளே 3) உடகம்மா 4) லியனரால

24) கீழே நிரல் I இல் கண்டி மன்னர்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் போர் நடைபெற்ற ஆண்டினையும் நிரல் II இல் போர்கள் இடம்பெற்ற இடங்களும் தரப்பட்டுள்ளன. நிரல் I இனை நிரல் II உடன் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடை யாது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1 கி.பி 1630 | A பலனை |
| 2 கி.பி 1602 | B தந்துறை |
| 3 கி.பி 1638 | C கன்னொருவ |
| 4 கி.பி 1594 | D ரந்தெனிவெல |

**1) C, A,D, B 2) D, A, B, C 3) D, A, C, B 4) C, A, B, D**

25) வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவெனாக்கள் பல்கலைக்கழகங்களாக தரம் உயர்த்தப்பட்ட போது இலங்கையில் பிரதம மந்திரியாகப் பதவி வகித்தவர் யார்?
1) திருமதி சிறிமாவோ பண்டார நாயக்க 2) சேர் ஜோன் கொதலாவல
3) டட்லி சேனாநாயக்க 4) S.W. R.D பண்டார நாயக்க

26) பின்வருவனவற்றுள் கைத்தொழிற் புரட்சியின் விளைவுகளினால் அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றமாகக் குறிப்பிடக்கூடியது
1) கைத்தொழில் உற்பத்திகள் அதிகரித்தமை
2) சூழல் மாசடைதல் அதிகரித்தமை
3) முதலாளி, தொழிலாளி வர்க்க முரண்பாடுகள் அதிகரித்தமை
4) வர்த்தக பொருளாதார முறை வேகமாகப் பரவியமை

● கீழே **A, B, C, D** ஆகியவற்றில் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்தில் கொண்டு 27 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - 1.பொலநறுவை இராச்சியம் B - 1. ஜோன் டொயிலி
2. கலிங்க மாகன் ஆக்கிரமிப்பு 2. கண்டி இராச்சியம்
C - 1. கி.பி 1818 ஆம் ஆண்டின் சுதந்திரப் போராட்டம் D - 1. சாமுவெல் கொம்படன்
2. வீரபுரன் அப்பு 2. நெசவுக் கைத்தொழில்

27) இரண்டாவதன் வீழ்ச்சிக்கு முதலாவதன் செயற்பாடு காரணமாக அமைந்த விடயச் சோடி எது?
**1) A 2) B 3) C 4) D**

28) முதலாவதன் வீழ்ச்சிக்கு இரண்டாவது காரணமாக அமைந்த விடயச்சோடி எது
**1) A 2) B 3) C 4) D**

29) முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையில் எந்தவித தொடர்பினையும் காட்டாத விடயச்சோடி எது?
**1) A 2) B 3) C 4) D**

30) இரண்டாவதன் வளர்ச்சிக்கு முதலாவதன் செயற்பாடு காரணமாக அமைந்த விடயச் சோடி எது?
**1) A 2) B 3) C 4) D**

31) றொபட் அன்ட்றூஸ் (1795) என்ற பெயருடைய ஆங்கிலேய நாட்டுத் தூதுவர் கண்டி இராச்சியத்துக்கு வருகை தரும்போது கண்டியை ஆட்சி செய்த மன்னர் யார்?
1) இராஜாதி இராஜசிங்கன் 2) இரண்டாம் இராஜசிங்கன்
3) ஸ்ரீ விஜய இராஜசிங்கன் 4) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

32) இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சிக் காலகட்டத்தில் அச்சகம் ஒன்றை நிறுவி பௌத்த மறுமலர்ச்சிக்கு முக்கியமான பங்காற்றியவர் யார்?
1) இரத்மலானை தர்மலோகத்தேரர் 2) ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கலதேரர்
3) வலானை சித்தார்த்ததேரர் 4) புலத்கம ஸ்ரீ சுமணதிஸ்ஸதேரர்

● பின்வரும் **A,B,** என்பவற்றின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 33 ஆம் 34 ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A - ஆளுநர் நாயகம் பதவி கொண்டு வரப்பட்டமை
B - தேசிய அரசுப் பேரவை உருவாக்கப்பட்டமை

33) 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு யாப்புச் சீர்திருத்தத்துடன் தொடர்புடையது
1) **A** சரியானது **B** பிழையானது 2) **A** யும் **B** யும் சரியானது
3) **A** யும் **B** யும் பிழையானது 4) **B** சரியானது **A** பிழையானது

34) 1947 ஆம் ஆண்டின் சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தத்துடன் தொடர்புடையது
1) **A** சரியானது **B** பிழையானது 2) **A** யும் **B** யும் சரியானது
3) **A** யும் **B** யும் பிழையானது 4) **B** சரியானது **A** பிழையானது

35) 19 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் சமய மறுமலர்ச்சி தொடர்பான நான்கு கருத்துச் சோடிகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றில் பொருத்தமற்ற சோடி யாது?
1) எம். சி. எம் சித்திலெப்பை - முஸ்லிம் நேசன் பத்திரிகையை வெளியிட்டமை
2) ஹென்றி ஸ்றில் ஒல்கொட் - பிரம்ம ஞான சங்கத்தை தோற்றுவித்தமை
3) வலானை சித்தாத்ததேரர் - பேலியகொட வித்தியாலங்கார பிரிவெனாவை தோற்றுவித்தமை
4) அநாகரிக தர்மபால - மஹாபோதி சங்கத்தை தோற்றுவித்தமை

36) 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்த பின்னர் நாட்டில் நடைபெற்ற ஒரேயொரு தேர்தலாகக் குறிப்பிடப்படுவது
1) பாராளுமன்றத் தேர்தல்
2) பொதுஜன அபிப்பிராயத்தேர்தல்
3) ஜனாதிபதித் தேர்தல்
4) உள்ளூராட்சித் தேர்தல்

37) மத்திய கால ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக பல்வேறு துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. பின்வரும் எத்துறையின் மூலம் மைக்கல் ஆஞ்சலோ பிரசித்தி பெற்றார்
1) சிற்பக்கலை 2) இலக்கியம்
3) மருத்துவம் 4) விஞ்ஞானம்

38) கீழே A, B, C, D எனக் குறிப்பிடப்பட்ட வரலாற்று நிகழ்வுகளில் ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் கோட்டையை ஆட்சி செய்த காலப்பகுதியில் வாழ்ந்த ஒருவருக்கு அறிந்து கொள்ள முடியாத விடைத்தொகுதியைத் தெரிவு செய்க

1) A - ஜேத்தவனராம தாதுகோபம் அமைக்கப்பட்டமை
2) B - மூன்றாம் விஜயபாகு மன்னன் பெலிகலையில் தலதாமாளிகை அமைத்தமை
3) C - ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றிக் கொண்டமை
4) D - கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் ஒல்லாந்தருடன் சமாதான ஒப்பந்தம் செய்தமை

1) A யும் B யும் 2) A யும் C யும்
3) C யும் D யும் 4) A யும் D யும்

39) ஒல்லாந்தரின் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் (VOC) முக்கிய குறிக்கோளாக அமைந்த விடயம்
1) புரட்டஸ்தாந்து மதப்பரம்பல் 2) பொருளாதார இலாபத்தினைப் பெறல்
3) நாடுகளைக் கைப்பற்றல் 4) வெளிநாட்டுத் தொடர்புகளை துண்டித்தல்

40) இலங்கையில் அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் கொண்ட நீதிமன்றம் எது?
1) உச்ச நீதிமன்றம் 2) மேல் நீதிமன்றம்
3) மாவட்ட நீதிமன்றம் 4) மேன்முறையீட்டு நீதிமன்றம்

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை 09.06.2020 அன்று பிரசுரமான வினாத்தாள் பகுதி-II இற்கான விடைகள்

01.
1) சேவல் , காகம்
2) மலரும் மொட்டு / இரத்தினக்கற்கள்
3) கூட்டம் கூட்டமாக
4) ஐந்து (5)
5) செல்கின்றனர்
6) கணீர் கணீர்
7) கதிரவனை
8) பலவின்பால்

02. பொருத்தமான வசனம் எழுதுக.

03. பொருத்தமான எழுத்துக்கள்

04. 1. செம்பொற் குடம் போல
2. இந்திர சாலமோ

05. 1. மரம்
2. வாகை

06. 1. 216
2. ஔ

07. 1. புற்றரை
2. கொன்றைமரம்

08. 1. ஓடம் + ஒன்று
2. மாட்சியிலுள்ளம்

09. 1. பாளங்களை
2. களிப்

10. 1. மாணவர்கள் , ஆசிரியர்கள்
2. மரங்கள் , புத்தகங்கள்
3. விஞ்ஞானி , நோயாளி
4. கண்ணன் 5. பூ


11. 1. (✓) 2. (✗)

12. 1. அம்ப
2. நெலும்
3. மகே அங்கய துனய்

13. 1. aeroplane / AEROPLANE
2. Flowers / FLOWERS
3. இது என்ன?

.பொருத்தமான வாக்கிய அமைப்புக்கு எழுத்துப் பிழைகளை கருத்திற் கொண்டு நிகழ்காலத்தில் விடைகள் எழுதியிருப்பதை கவனித்து புள்ளி வழங்குக.

14. 1. 2439
2. I. நூறு/நூறுக்கள்/நூறாமிடம் II. அறுநூறு/600
3. I. 5953 II. 70000
4. I. 52600 , 52599 , 52550 , 49650
5. I. 129 , 135 II. 29 , 36
6. 2m , 25cm
7. 12 மணித்தியாலம்
8. 12 குழுக்கள்
9. **6kg 750g**
10. 9
11. II III IV V VI VII VIII IX
12. 4168

13.



14. 3615

15. I. சித்திரை , ஆனி , புரட்டாதி , கார்த்திகை
II. தை , பங்குனி , வைகாசி , ஆடி, ஆவணி , ஐப்பசி, மார்கழி

16.

| | |
|---|---|
| 1. 3 | 2. 4 |
| 3. 1 | 4. 4 |
| 5. 1 | 6. 3 |
| 7. 3 | 8. 2 |
| 9. 4 | 10. 1 |
| 11. 2 | 12. 3 |
| 13. 2 | 14. 1 |
| 15. 2 | 16. 2 |
| 17. 2 | 18. 1 |
| 19. 3 | 20. 4 |
| 21. 3 | 22. 2 |
| 23. 1 | 24. 2 |
| 25. 4 | 26. 1 |
| 27. 2 | 28. 3 |
| 29. 2 | 30. 3 |

# வடக்கு மாகாண கல்வி திணைக்களமும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை

## க.பொ.த.சாதாரணதரம் - வரலாறு

நேரம்: 3 மணித்தியாலம் வினாப்பத்திரம் - 02

- மேலதிக வாசிப்பு நேரம்:- 10 நிமிடங்கள்
  வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

கவனிக்க.
- பகுதி I இல் முதலாம் வினா கட்டாயமானது
- பகுதி II இல் இருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.
- பகுதி III இல் இருந்து ஒரு வினாவுக்கு விடை எழுதுக.
  எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

01)
(அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படப் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

(i) கிரிந்தி ஓயா, யான் ஓயா, சொரபொர வாவி, புத்தளம், பூநகரி, ஜம்புகோளப் பட்டினம், நில்வளதித்த,பதுளை, சீதாவாக்கை, பெட்ரிக்கோட்டை, இப்பன்கட்டுவ, மட்டக்களப்பு


(ii) ரோம், யாவாத்தீவு, மும்பாய், ஹிரோசிமா, சுயெஸ் கால்வாய், நெதர்லாந்து

(ஆ) (i) கீழே A, B,C, D எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - கி.பி 1922ஆண்டில் இலங்கை தொழிலாளர் சங்கத்தை உருவாக்கிய முதலாவது தலைவர்
B - போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது கோட்டை இராச்சியத்தினை ஆட்சி செய்த மன்னன்
C - கர்ப்பிணித் தாய்மாரின் தேவைக்காக பிரசவ விடுதிகளைக் கட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட மன்னன்
D - திரிபீடகம் எழுத்துருவம் பெறும்போது இலங்கையை ஆட்சி செய்த மன்னன்

● கீழே **A, B** ஆகியவற்றினால் கீழே காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1) படம் (A) யில் காட்டப்பட்டிருப்பது யாது?
2) இது எந்த வரலாற்றுக் காலப்பகுதிக்குரியது?
3) இது உருவாக்கப்பட்ட கல் வகை எது?
4) இது கண்டெடுக்கப்பட்ட ஒரு இடத்தினைக் குறிப்பிடுக.


(A)

(iii) (1) படம் B யில் காட்டப்பட்டிருப்பவரின் பெயர் என்ன?
(2) இவர் எந்த நாட்டை பிறப்பிடமாகக் கொண்டவர்?
(3) இவரால் எழுதப்பட்ட கடிதம் எந்த இடத்தில் எழுதப்பட்டது?
(4) இவர் எழுதிய கடிதம் இலங்கையில் யாரிடம் வழங்கப்பட்டது?


(B)

### பகுதி II

02)
(i) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(ii) A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள பின்வரும் ஒவ்வொரு வரலாற்றுத் தகவல்களுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

A - நத்தைகளின் எச்சங்களுடன் உப்பு கலந்திருந்தமை தொடர்பான அடையாளங்கள் கண்டறியப்பட்ட குகை வசிப்பிடம்

B - இலங்கையில் முதன் முதலில் குடியேறிய மனித இனத்தின் பெயர்

C - வெவ்வேறு காலப்பகுதிக்குரிய ஒன்பது நபர்களின் எலும்புக் கூடுகள் கிடைக்கப்பெற்ற வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குகை வசிப்பிடம்

D - அகழ்வின்போது இரண்டாகப் பிளக்கும் வகையில் துளையிடப்பட்ட மண்டையோடு கண்டெடுக்கப்பட்ட குகை
(பட்டதொம்பலென, கித்துள்கலபெலிலென, பாகியன்கல, சீகிரியா பொத்தான, ஹோமோ சேப்பியன், இராவண எல்ல, பெல்லன்பதி பெலஸ்ஸ, ஹோமோ ரெக்டஸ்)

(iii) இலங்கையில் முன்வரலாற்றுக் காலத்தில் பின்பற்றப்பட்ட மரணச் சடங்கு முறைகளை இரண்டு உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

(iv) A - ஆரம்ப வரலாற்றுக் காலம் என்றால் என்ன என்பதனை காலப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு வரையறை செய்க.
B - ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்களினது இயல்புகளை இரண்டு காரணிகளின் ஊடாக விளக்குக.

03)
(i) இலங்கையில் அதிகாரம் மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தில் பின்வரும் பணிகளுடன் தொடர்புடைய நபர்களின் உத்தியோகபூர்வப் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.
A - உணவுச்சாலை அதிகாரி.
B - யானைப் பிரிவின் தலைவர்.
C - வர்த்தக நடவடிக்கைக்கான தலைவர்
(அச அதெக, படகரிக, பதகு, ஹதி அதெக, பனஅதெக)

(ii) பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களுடன் தொடர்புடையர்களை A,B, C, D ஒழுங்குமுறையில் எழுதுக.

A - தனது பத்தாவது ஆட்சி வருடத்தில் கிராமங்களுக்கு எல்லை வகுத்த மன்னன்

B - கல்வெட்டு மூலாதாரம் ஒன்றில் தன்னைக் குறிப்பதற்கு அலகபய மகாராஜா என்ற சொல்லைப்பயன்படுத்திய மன்னன்

C - சில கல்வெட்டுக்களில் தன்னை இனம் காட்டிக் கொள்வதற்காக காலிங்க சக்கரவர்த்தி பெருமான் என்ற சொல்லினைப் பிரயோகித்த மன்னன்

D - பத்தினி தெய்வக் கோயில் ஒன்றின் திறப்பு விழாவிற்கு தென்னிந்திய சேர இராச்சியத்துக்கு சென்ற மன்னன்

(iii) புராதன காலத்தில் இலங்கையில் முன்னேற்றமடைந்திருந்த வைத்திய சேவை நிலவியமையை இரண்டு தொல்பொருட் சான்றுகளின் ஊடாக விளக்குக.

(iv) புராதன காலத்தில் கட்டடங்களை நிர்மாணிக்கும்போது பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்ப முறைகளை மூன்று உதாரணங்கள் மூலம் சுருக்கமாக விளக்குக.

04)
(i) புராதன நகரங்கள் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் மூன்று தருக.

(ii) கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்களுக்குரிய விடைகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

A - யாப்பகூவவை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த முதலாவது மன்னன்
B - கோட்டை அரணை பாதுகாப்புடன் அமைத்த பிரதானி
C - "கவிசிலுமின" என்ற நூலை எழுதிய ஆட்சியாளன்
D - இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியின் பின்னர் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த அரசவம்சம்

(வீரஅழகேஸ்வர, இரண்டாம் பராக்கிரமபாகு, மூன்றாம் விஜயபாகு, இரண்டாம் புவனேகபாகு,முதலாம் புவனேகபாகு, நிஸங்க அழகக்கோனர், ஆரியசக்கரவர்த்திகள், வன்னியர்கள்)

(iii) இரண்டாவது நகரமயமாக்கல் காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த சமயங்களின் நிலையினை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(iv) ஆறாம் பராக்கிரமபாகுவின் கோட்டை இராச்சிய ஆட்சிச் சிறப்பினை அரசியல், கல்வி மற்றும் பண்பாட்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

05)
(i) A - கண்டி இராச்சியத்தின் பாதுகாப்புடன் தொடர்புடைய இரண்டு கணவாய்களைப் பெயரிடுக.

B - கண்டி இராச்சியத்தின் முதலாவது மன்னனாகக் கருதப்படுபவர் யார்?

(ii) பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களுக்கு பொருத்தமான விடைகளை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து A, B, C, D ஒழுங்கு முறையில் எழுதுக.

A - கி.பி 1580 ஆம் ஆண்டில் கண்டி இராசதானியைக் கைப்பற்றி சீதாவாக்கையில் இருந்து கண்டியைஆட்சி செய்த மன்னன்

B - கி.பி 1619 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேய இராணுவப் பிரதானி

C - கி.பி 1638 ஆம் ஆண்டில் கன்னொருவைப் போருக்கு தலைமை தாங்கிய போர்த்துக்கேய கப்பித்தான்ஜெனரல்

D - கி.பி 1764 இல் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்த ஒல்லாந்த ஆளுநர்

(பன்னங்கெல் பக். முதலாம் இராஜசிங்கன், இரண்டாம் இராஜசிங்கன், பெரன் வென் எக்.கொன்ஸ் தாந்தினு த சா, தியோகோ த மெல்லோ, பிலிப்த ஒலிவேரா, பெரோ லோபேஸ் த சூசா)

(iii) இரண்டாம் இராஜசிங்கன் தனது ஆட்சியின்போது எதிர்நோக்கிய இரண்டு சவால்களை விளக்குக.

(iv) கண்டி நகர்க்கால ஆட்சியாளர்களில் "கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் முக்கியத்துவம் மிக்க ஆட்சியாளன்"இக்கூற்றினை மூன்று விடயங்களின் துணையுடன் விளக்குக.

06)

(i) ஆங்கிலேயர் இலங்கையின் அதிகாரத்தை தமதாக்கிக் கொள்வதில் செல்வாக்குச் செலுத்திய கறுவா தவிர்ந்த மூன்று வர்த்தகப் பொருட்களைக் குறிப்பிடுக.

(ii) பிரித்தானியர்களின் கவனம் இலங்கை மீது ஈர்க்கப்பட்டமைக்கான இரு காரணங்களைக் குறிப்பிடுக.

(iii) கி.பி 1803 இல் கண்டி மீதான படையெடுப்பு தோல்வி அடைந்தமைக்கான காரணத்தினை இருவிடயங்களின் ஊடாக விளக்குக.

(iv) கி.பி 1848 இல் பிரித்தானியருக்கு எதிரான இரண்டாவது சுதந்திரப் போராட்டம் ஏற்பட்டதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் கோல்புறுக்கின் சீர்திருத்தம் முக்கியமானதாகும். இதில் பின்வரும் இரு காரணிகளை விளக்குக.

A -அரசின் நிலக்கொள்கை

B- கிராம சபைகள் செயலற்றுப்போதல்

07) பின்வரும் அரசியல் மாற்றங்கள் ஒவ்வொன்றும் எந்த அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் கீழ் இடம்பெற்றது என்பதனை A, B,C ஒழுங்குமுறையில் எழுதுக.

(i) A சட்டவாக்கக் கழகத்தில் உத்தியோக சார்பற்றவர்கள் பெரும்பான்மை பெற்ற அரசியல் யாப்பு

B உறுப்பினர்களின் எண்ணிக்கை 101 பேர்கள் அடங்கிய பிரதிநிதிகள் சபை ஸ்தாபிக்கப்பட்டமை

C சட்டவாக்கக் கழகத்தில் இலங்கையருக்காக கல்வி கற்ற பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை

(ii) கோல்புறூக் யாப்பின் சீர்திருத்தங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்ட இரண்டு சீர்திருத்தங்களை சுருக்கமாக விளக்குக.

(iv) கி.பி 1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியல் யாப்பின் கீழ் பின்வரும் இரு அம்சங்களைவிளக்குக.

A - அடிப்படை மனித உரிமைகள் B - நீதிமன்றம்

## பகுதி III

08)

(i) ஐரோப்பாவில் மறுமலர்ச்சி தோற்றம் பெற்றதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்று எழுதுக.

(ii) பின்வரும் நபர்களுடன் தொடர்புடைய கண்டுபிடிப்புக்களை A, B, C, D ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

A - கூடன் பேர்க்

B - வில்லியம் ஹார்வே

C - ஜொஹென்ஸ் கெப்லர்

D- கலிலியோ கலிலி

(iii) A - கல்வி மறுமலர்ச்சி என்றால் என்ன?

B - மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியத்துறைக்கு பணியாற்றிய மூன்று எழுத்தாளர்களைப் பெயரிடுக.

(iv) மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய வர்த்தகப் பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டமையால் ஏற்பட்ட விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

09)

(i) கைத்தொழில் துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியானது காலப்போக்கில் செல்வாக்குச் செலுத்திய மூன்று துறைகளைப் பெயரிடுக. (முதல் மூன்று துறைகளையும் தவிர்த்து)

(ii) கைத்தொழில் புரட்சி பிரித்தானியாவில் ஆரம்பித்தமைக்கான காரணிகள் நான்கு தருக.

(iii) கைத்தொழில் புரட்சிக் காலத்தில் பிரித்தானியாவில் நிலக்கரி சுரங்கக் கைத்தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றகரமான நிகழ்வுகளை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.

(iv) கைத்தொழில் புரட்சி இலங்கையில் செல்வாக்கு செலுத்திய விதத்தினை மூன்று காரணிகளின் ஊடாக சுருக்கமாக விளக்குக.

